**PHOTONTECH**
175, Main Street
Trincomalee
075 6602486
warranty

அறைவு 02 இயம் 48 July 25 - August 01, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

**CCTV Installation & Maintenance**
**PHOTONTECH**
175, Main Street
Trincomalee
075 6602486

# திருமலை வளாக முதல்வர் தற்காலிகப் பணி நிறுத்தம்....!




கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் தற்காலிகமாகப் பணி நீக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் முடிவின் படி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இப்பணிநீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முதல்வருக்கு எதிராக எழுந்துள்ள பலமான குற்றச்சாட்டுகள் பலவற்றின் அடிப்படையில் பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக இப்பணி நீக்கத்தை ஆதரித்துள்ளனர் என கிழக்கு பல்கலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து திருமலை வளாகத்திற்குப் பதில் முதல்வராக கலாநிதி.சி.ரகுராம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.......

13

# பதறியடித்து ஓடிய பெண்



திருகோணமலை கடற்கரைச்சவுக்குத் தோப்பில் இருந்து திடீரென வெளிப்பட்ட பர்தா அணிந்திருந்த பெண்ணொருவர் மீது மற்றொரு தமிழ்ப் பெண் சரமாரியாகத் தாக்கத் தொடங்கியதை அடுத்து, அப் பர்தா அணிந்த பெண் தலைதெறிக்க ஓடி, புனித மரியாள் கல்லூரிக்கு முன்பிருந்து நாலாம் கட்டைப் பிரதேசத்திற்கு முச்சக்கர வண்டியை வாடகைக்கு எடுத்துச் சென்றது அவ்விடத்தில் பெரும் களோபரத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மதியம் 12.30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தை பலர் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆணொருவர் குறித்த தமிழ்ப்பெண்ணைச் சரிமாரியாகத் தாக்கியதை தொடந்து விடயம் வெளித்தெரிந்துள்ளது. குறித்த ஆண் தனது இரு குழந்தைகளுடன் முஸ்லிம் பெண்ணொருவரையும் அழைத்துக் கொண்டு கடற்கரைச் சவுக்குத் தோப்பில் இருந்துள்ளார். அதனை எவ்வாறோ தெரிந்து கொண்ட அவரின் மனைவி உரிய இடத்திற்கு வருகை தந்து பர்தா அணிந்த பெண்மீது தாக்குதலைத் தொடுத்துள்ளார் அத்தாக்குதலில் இருந்து .........

13

ல்களில் இ தம் ாதுகாத்துக்கெ முஸ்

# “கிழக்கையும் வடக்கையும் விழுங்குகிறது இந்தியா”



கிழக்கிலும் வடக்கிலும் பெரும்பகுதியை இந்தியா சவைத்து விழுங்குவதாக ஜே.வி.பி யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்தியா மருந்துப்பொருட் சந்தையிலும், தன்னியக்க ஊர்திச் சந்தையிலும் பெரும் பங்கைக் கொண்டிருப்பதுடன் கிழக்கிலும் வடக்கிலும்.....

13

## “அப்பாவிச் சம்பூர் மக்களை அகற்றிவிட்டு அங்கு மின் நிலையம் அமைப்பது யார் ???”




# 50 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்படவில்லை

கடந்த 3 மாதங்களுக்கு முன் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட சுமார் 50 கிலோ ஹெரோயின் சுங்கத்தால் கைப்பற்றப்படாமல் வெளியே போய்விட்டதாம். தற்போது அரைக்கும் இயந்திரங்களுக்குள் வைத்துக் கடத்தப்பட்ட சுமார் 93 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டபோது 3 மாதங்களுக்கு முன் அதே பெறுனருக்கு இயந்திரங்கள் அனுப்பப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# மத்தள விமான தள மே மாத வருமானம் ரூபா 16,185.00

மத்தள விமான நிலையத்தின் மே மாத வருமானம் வெறும் 16,185.00 என இணையத் தகவலொன்று தெரிவிக்கின்றது. இவ்விடயம் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வாவிற்கும் பொதுவான்பறப்பு அமைச்சர் பிரியங்கா குணரத்னாவிற்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

# “பேச்சாளர் இல்லையேல் காவல்துறையே இல்லை”

கர்வல்துறைப் பேச்சாளர் இல்லாவிட்டால் காவல்துறையே இல்லை என அதன் பேச்சாளர் அஜித் றோகண தெரிவித்துள்ளார். அண்மையில் சிங்கள தொலைக்காட்சியொன்றில் நடத்தப்பட்ட நேர்காணலில் அவர் தனது கடமை என்னவெனில் “மன்னரைப் பாதுகாப்பது” எனத் தெரிவித்து விட்டு பின்னர் அதனைத் திருத்தி “அரசாங்கத்தைப் பாதுகாப்பது” எனத் தெரிவித்து பின்னர் “அரசாங்கம் என்பது மக்களே” என்று முடித்து வைத்துள்ளார்.

இவ்வாண்டில் தற்போதுவரை தன்னைப்பற்றி 176 கேலிச்சித்திரங்கள் வெளியாகியுள்ளதாகவும் அவற்றைத் தான் சேகரித்துள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்துள்ளர்.

**AFTER ADVANCED LEVEL....**
Join Full time Courses
@
**VEAL BUSINESS COLLEGE**
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738
aat SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# இடறுவது இந்தியாவா? நாமா?

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்தியா சென்று திரும்பிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் அவர்களுக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இரண்டு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அவை இலங்கைக்கு எதிரான எந்தவொரு சர்வதேச விசாரணைக்கும் இந்தியா இடமளிக்கப் போவதில்லை என்பதும், அவ்வாறான விசாரணைகளுக்கான வாக்கெடுப்புக்கள் ஏதும் நடைபெறுமாயின் அவ்வாக்கெடுப்புக்களில் கலந்துகொள்ளப்பபோவதில்லை என்பதுமே அவை.....

இலங்கைத் தமிழர்கள் தொடர்பான இந்திய நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் என்பதில் இன்னமும் நாம் பின்நிற்பதுடன் எமது தமிழ்த் தலைமைகளும் அவ்விடயத்தின் உண்மைத் தன்மையை தாம் சரியாகப் புரிந்து கொள்ளவோ அல்லது அதனைச் சாதாரண தமிழ் மக்களுக்குப் புரிய வைக்கப் போவதோ இல்லை போலத்தான் தெரிகின்றது.

இலங்கைத் தமிழர் தொடர்பான இந்திய நிலைப்பாட்டை காலத்திற்குக் காலம் உருவாகிவரும் பிராந்திய நிலைப்பாடே தீர்மானிக்கின்றது.

நிதித்துறையில் பிரிக்ஸ் நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ள வங்கியானது உலகின் மேலாண்மைச் சக்திகளுக்கு எதிராகப் போரிடும் ஆயுதமாக மாறியுள்ளது. இவ்வங்கியானது தனது பொருளாதார பலத்தை ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்குப் பிரயோகிக்கும் போது மேற்குலகின் மேலாண்மைவாதப் போக்கு அவ்வபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சிதலமடையும் என்பதில் ஐயமில்லை.

இந்த பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பினை எடுத்து நோக்கினால் பிறேசில், ரஸ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்(சவுத்)ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டணியாக உள்ளதுடன் பொருளாதாரத்தில் முதலாமிடத்திலுள்ள சீனாவைத் தன்னகத்தே கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்திய நகர்வானது மேற்குலக நாடுகளுடன் தொடர்பினை முற்று முழுதாக முறிக்காமலிருப்பதாக இருந்தாலும் பிரிக்ஸ் நாடுகளுடன் அதிகளவு ஆதரவுடனேயே செயற்படும் என்பதில் ஐயமில்லை.

இவ்வைந்து நாடுகளில் ரஸ்யாவும், சீனாவும் இலங்கையின் கடும் ஆதரவு நாடுகள் என்பதுடன் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையிளன் நிரந்தர அங்கத்துவ நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கைத் தமிழர் தொடர்பான இந்திய நிலைப்பாட்டைத் தீர்மானிக்கப்போகும் மிகமுக்கிய காரணியாக இனி பிரிக்ஸ் தான் இருக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை.

அதைக் குறிவைத்தே இலங்கை தனது காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டது. அதன் வெளிப்பாடாக போர்க்காலத்தில் இலங்கையின் உற்ற நண்பனாகவும், ஆயுதக் கப்பல்களை அடுத்தடுத்து இலங்கைக்கு அனுப்பிவைத்துதவி புரிந்த' நாடுமான பாகிஸ்தானைக் கழட்டிவிட இலங்கை முனைந்துள்ளது.

இந்தியாவுடன் பரஸ்பர விட்டுக்கொடுப்புகளுக்கு இலங்கை தயாராகி இருப்பதனை இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கு அதிகரித்திருப்பது சுட்டுகின்றது.

ஆகவே இந்தியாவில் மோடி வந்தாலென்ன இனியொரு தோடி வந்தாலென்ன அந்நாட்டின் இலங்கைத் தமிழர் தொடர்பான எண்ணக்கருவில் உணர்ச்சிகரமான மாற்றம் எதையும் நாம் எதிர்பார்க்க முடியாது!

இடறுவது இந்தியா அல்ல.... எம் இலக்கற்ற சிந்தனைகளே...!!!!!

# மாவட்ட வர்த்தக கைத்தொழிற் சம்மேளனத்தின் தொழில்முனைவோர் விருதுகள் 2014

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (National Enterprise Development Authority (NEDA), திருக்கோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்துடன் (Chamber of Commerce and Industries Trincomalee District) இணைந்து நடாத்தும் கிழக்கு மாகாணத்தின் தொழில்முனைவோர் விருதுகள் 2014 (eastern Province Entrepreneurship Award 2014) திருக்கோணமலையில் நடைபெறவுள்ளது. மாகாணத்தின் சிறந்த முயற்சியாண்மைகளுக்காக மொத்தமாக 20 விருதுகள் இவ்விழாவில் வழங்கப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஒப்பந்தம் கொழும்பில் உள்ள தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் திரு. சஹீட் அவர்களும்இ திருக்கோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் திரு. வ. கலைச்செல்வன் அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இந்நிகழ்வு திருக்கோணமலையில் நடைபெறும்.




விண்ணப்பபடிவத்தை பெற்றுக்கொள்ள திருக்கோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனததில் அல்லது www.trincomaleechamber.lk இணையதளத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

# ஜனார்த்தனன் மா.உ வின் நிதியில் மின்பிறப்பாக்கி

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து திருக்கடலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு மின்பிறப்பாக்கி (தநயெசயவழச) ஒன்று வழங்கப்பட்டது. 19-07-2014 அன்று திருகடலூரில் இடம்பெற்ற நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மின்பிறப்பாக்கியை கையளித்தார்..

இந்நிகழ்வில் திருக்கோணமலை நகர சபை உறுப்பினர் கா.கோகுல்ராஜ், கிழக்குமாகாண விவசாய அமைச்சின் கணக்காளர், மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..



# புல்மோட்டை அனைத்து பள்ளிவாசல் ஒன்றிய புதிய நிர்வாக சபை தெரிவு

குச்சவெளி விசேட நிருபர் (ஏ.சீ.ஹாலீத்)

புல்மோட்டைப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார ஒழுக்க விழுமியங்களையும், பண்பாட்டு பாரம்பரியங்களையும் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் சகல பள்ளிவாசல்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்ற புல்மோட்டை அனைத்து பள்ளிவாசல்களின் ஒன்றியத்திற்கான புதிய நிருவாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் 2014-07-18ம் திகதி புல்மோட்டை முஹைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

பெரியபள்ளிவாசல் தலைவர் ஜனாப் கலீல்லெப்பை தலைமையில் புல்மோட்டை பிரதேச ஜம்மியத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி அப்துல் சமது அவர்களின் பங்குபற்றுதலுடன் பிரதேசத்தில் கடமை புரியும் கிராம சேவையாளர்களான எம்.எம்.சலாம் மற்றும் தாஜுதீன் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற மேற்படி நிருவாக சபைத் தெரிவில் புல்மோட்டைப் பிரதேசத்திலுள்ள 14 பள்ளிவாசல்களின் பரிபாலன சபைகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

புதிய நிருவாக சபைத்தலைவராக மௌலவி ஐயூப்கான், செயலாளராக ஏ.ஆர்.றவுப், பொருளாளராக மௌலவி றஹீம், போன்றோரும் உப தலைவராக என்.எம்.மஜீத், உப செயலாளராக மௌலவி பரீத் ஆகியோரும் தெரிவானார்கள்.

# மனைவிக்கு அசிட் வீச்சு கணவன் தலைமறைவு

புல்மோட்டை நிருபர் (அனீஸ்)

குடும்பத் தகராறை அடுத்து மனைவிக்கு அசிட் வீசிய கணவன் தலைமறைவாகியுள்ளார்.

புல்மோட்டை மகெசென்புர பகுதியிலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாகக் காவல்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 23ம் திகதி மாலை கணவனுக்கும் மனைவிக்கும இடையே நடைபெற்ற வாக்குவாதத்தை அடுத்து வெளியே சென்ற கணவர் திரும்பி வந்து இத்தாக்குதலை மனைவி மீது மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார். தாக்குதலில் காணமடைந்த மனைவி அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காவல்துறையினர் தலைமறைவான கணவனுக்கு வலைவீசியுள்ளனர்.

# நகரசபையின் உள்ளூராட்சி வாரம்

(அச்சுதன்)

திருகோணமலை நகரசபையின் உள்ளூராட்சிவார நிகழ்வு நகாரசபையின் தலைவர் க. செல்வராஜா தலைமையில் நடை பெற்றது. இவ்விழாவில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண உள்ளராட்சி ஆணையாளர் ஜனாப் எம்.வை சலீம் கலந்து கொண்டார்.



நகரசபைச் செயலர் ஏ.எல்.எம் நபீல்

அதிதிகளின் வரவேற்பு

நகரசபைத்தலைவர் க. செல்வராசா

# தி-ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு போக்குவரத்துக் காவல்துறை பயிற்சி






படங்கள்-அர்ஜூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசுசாரா நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடு"

## சனநாயகத்தின் மீது வீழ்ந்த மற்றொரு அடி




நீங்கள் உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் இணைத்துக்கொண்டு ஒரு நாட்டை ஆளுகின்றீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அரசாங்கத்திலுள்ள அதிகாரம் மிக்க, நிறைய நிதிகள் கையாளக்கூடிய ஒவ்வொரு பதவியும் உங்களின் யாராவதொரு உறவினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எந்தப் பாரிய திட்டமானாலும் சரி, சிறிய திட்டமானாலும் சரி, அதில் வருகின்ற கொமிஷன் பணமெல்லாம் உங்கள் உறவினர்கள் மத்தியிலேயே பங்கிடப்படுகின்றது.

அவர்களில் யாரேனும் விரும்பினால் இலங்கையின் விமானமான ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸினை தமது சொந்தத் தேவைக்காக எந்த விமான நிலையத்திலும் காத்திருக்க வைக்கலாம், ஏன், அதனை அது சாதாரணமாகப் போகத் தேவையில்லாத விமான நிலையத்திற்கும் போக வைக்கலாம். யாரும் கேள்வி கேட்க முடியாது. அப்படித் துணிந்து கேட்டால், தொலைபேசி மூலம் மட்டுமே அச்சுறுத்தி நாட்டை விட்டே ஓட வைக்கலாம்.

இப்படி எத்தனை எத்தனையோ சௌகரியங்கள். சொர்க்கமே பூலோகத்தில் வந்த மாதிரியல்லவா? ஆனால் இந்த சொக்கத்தை நித்தமும் அனுபவிக்கலாமென்றால் அதற்கு சில எதிரிகள் முட்டுக்கட்டை போட முனைகின்றனர். அவர்கள் வேறு யாரும் இல்லை, உங்கள் குடும்பத்தவரின் பதவிகளும் அந்தக் கமிஷன்களும் கிடைக்கின்ற நிலையில் இருந்தும் கிடைக்காமல் போனவர்கள். உங்களைச் சுற்றி எத்தனை எதிரிகளைச் சம்பாதித்திருப்பீர்கள். ஆனால், உங்கள் பதவி ஏதோவொரு முறையினால் பறிபோய் விட்டால்.... இந்த எதிரிகளெல்லாரும் சேர்ந்து ஐயகோ உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் உண்டு இல்லையென்று பண்ணி விடுவார்களே.

ஒரு சாதாரண எதிர்க்கட்சி உறுப்பினராகக்கூட இருக்க முடியாதே. சிறையில் போட்டுத் தூக்கிலும் ஏற்றி விடுவார்களே. இதுவரை அனுபவித்த சொர்க்கம் நரகமாகி விடுமே. ஆதலினாலே, தோற்கக் கூடாது, தோற்கவே முடியாது.

இதுதான் இப்போதுள்ள ஆட்சியாளர்களின் நிலைமை. இலங்கையர் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் மூலம் ஆட்சியாளர்களை பதவியிலிருந்து இறக்கும் பண்பாடு அற்றவர்களென்பதால், ஒவ்வொரு தடவையும் தேர்தல்கள் வரும்போதுதான் தமது நிலைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது என்பது அவர்களுக்குத் தெரியும். ஒன்றொன்றாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்துவது இலகுவானது. சுகல வளங்களையும் ஒரே இடத்தில் இறக்கி வாக்ககளை வேட்டையாடி விடலாம். ஆனால் ஜனாதிபதித் தேர்தலோ நாடு முழுவதம் ஒரே சமயம் நடத்த வேண்டியது. நினைத்தாலே பயங்கரமானதல்லவா? அப்படியிருந்தும் செய்தேயாக வேண்டும். அதனையும் சோதிடர்களின் ஆலோசனையின்படியும் அரசியல் நிலைமைகளின்படியும் 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் என உத்தேசமாக தீர்மானித்தாகி விட்டாயிற்று. இதற்குள் சிக்கல்கள் பல இருக்கின்றன. எப்படியும் தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ மக்களின் வாக்குகள் கிடைக்கா. அப்படியானால் பௌத்த சிங்களவர்களின் வாக்குகளை மட்டும்தான் நம்ப வேண்டியிருக்கின்றது. அதில் யாரும் ஆப்பு வைக்காமல் பாதுகாக்க வேண்டும். இப்படி அவர்கள் குலை நடுங்கிக் கொண்டிருக்கும்போதுதான் அமெரிக்க அரசாங்கம் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தினைப் போட்டு இவர்களது வயிற்றில் புளியைக் கரைத்தது. வாக்காளர் விழிப்புணர்விற்கான கல்வியினை நடத்தும் திட்ட முன்மொழிவுகளைக் கோரி அரசு சாரா நிறுவனங்களுக்கு அது போட்ட விளம்பரம்தான் அது. அமைச்சரவையே (ஜனாதிபதியென்றே நீங்கள் வாசித்துக்கொள்ளலாம்) அதிர்ந்தெழுந்தது. வேறு வேறு நாடுகளில் ஆட்சி மாற்றத்தினைக் கொண்டு வந்த வல்லரசல்லவா அமெரிக்கா? தமது ஆட்சியினைத் தோற்கடிப்பதற்கு மறைமுகமாக போடப்பட்ட சதித் திட்டமே இது என்று நம்பியது. வாக்காளர் கல்வி என்பதற்குப் பின்னால் தமக்கெதிராக வாக்களிக்க மக்களைத் தூண்டப் போகின்றனர் என முடிவு செய்தது. அமெரிக்கத் தூதுவரை விளக்கமளிக்கக் கூப்பிட்டதுடன், அடுத்த நாள் நடந்த அமெரிக்க சுதந்திர தின வைபவத்திற்கு அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வழக்கம்போல் சிரேஷ்ட சிங்கள அமைச்சர்களை அனுப்பாமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினை அனுப்பி வைத்தது.

பிரஜை என்னும் இத்திட்டத்தினை அமெரிக்க அரசாங்கம் உடனேயே வாபஸ் வாங்கிக் கொண்டாலும், ஆட்சியாளர்களுக்கு எற்பட்ட சந்தேகம் போகவில்லை. முதலும் முடிவுமாக அரசு சாரா நிறுவனங்களைக் கட்டிப் போடத் துணிந்தனர். அதன் விளைவாகவே சென்ற வாரம் பாதுகாப்பு அமைச்சினால் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை முற்றாக மட்டுப்படுத்தும் சுற்று நிருபங்கள் அல்லது கடிதங்கள் அனைத்து அரசு சாரா நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இதன்படி, இவை ஊடக அறிக்கைகள் வெளியிடுவதோ, ஊடக சந்திப்புக்கள் நடத்துவதோ, ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகள் நடத்துவதோ, அல்லது பட்டறைகள் நடத்துவதோ தடை செய்யப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னார்வத் தொண்டரமைப்புக்கள் பொதுவாக இரண்டு வகையானவை. அரசாங்கம் வழங்குவது போன்று செவைகளை வழங்குவன ஒரு வகையின. இச்சேவைகள் தேவையானவர்களுக்கு போதுமான அளவில் தரமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுவதை உறுதி செய்யும் கட்டமைப்புக்களையும் பொறிமுறைகளையும் அரசியல் சூழல்களையும் மக்கள் உருவாக்கி பேணும் வகையில், மக்களுக்கான கல்வி புகட்டுவது மட்டுமின்றி அரசாங்கத்திற்குள் கொள்கைத் திட்ட மாற்றங்களையும் எற்படுத்துவன மற்றைய வகையின. ஷேசவகளை வழங்குவதென்றாலும், அச்சேவைகளைப் பராமரிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் மக்களுக்குத் தேவை. ஆரசியல் நிலைமாற்றத்தினைக் கோருகின்ற திட்டங்களென்றாலும் அதன் தகவல்களும் செய்திகளும் மக்களைச் சென்றடைய வேண்டும். எப்படிப் பார்த்தாலும், மக்களுடன் தொடர்பாடும் செயற்பாடுகளே தன்னார்வத் தொண்டரமைப்புக்களின் பிரதான கடமையாகும். அது இன்றி இவற்றின் எந்த நடவடிக்கையும் கிடையாது. அதனையே வேரறுத்திருக்கின்றது பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய சுற்று நிருபம்.

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், சகல துறைகளிலுமான அபிவிருத்தியினை உறுதி செய்தலும் சமூகத்தில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டுதலும் ஒரு அரசின் கடமைகளாகும். அவற்றினைப் பதவியிலிருப்பவர்கள் எப்பொழுதும் முறையாகச் செய்வார்கள் என்றில்லை. அரசாங்கத்தினால் தர முடியாத சேவைகளை வழங்குவதற்கு மக்கள் தம்மை பொது அமைப்புக்களாக வடிவமைத்தக்கொள்ளுகின்றனர். மேலும், அரச இயந்திரமானது அதிகார ஏற்றத்தாழ்வு சார்ந்ததும் பாரிய கட்டமைப்புக் கொண்டதுமாக இருக்கின்ற காரணத்தினால், நெகிழ்வுத் தன்மையுடன் அதனால் புத்தாக்கமான தீர்வுகளை நாட முடிவதில்லை. இதனால் புத்தாக்கமான தீர்வுகளைத் தரும் முன்மாதிரியான திட்டங்களை அரசு சாரா நிறுவனங்கள் செயற்படுத்தக் கூடியன. அவற்றின் திட்டங்கள் பின்பு அரச திட்டங்களையே மாற்றியமைக்க உதவுகின்றன. இவற்றை விடவும், மக்கள் நலன் சார்ந்து அரசு இயங்காத பொழுதுகளிலெல்லாம் அதனைக் கண்டித்து அதனை சரியான பாதைகளில் திசை திருப்ப அரசு சாரா நிறுவனங்களே உகந்தன. ஏனெனில் அவை எந்த அரசியல் தலைவருக்கும் அமைச்சருக்கும் சலாம் போடத் தேவையில்லாதன. இவையெல்லாவற்றையும் நோக்கினால், மக்களின் நலன் சாாந்து இயங்கம் ஒரு ஜனநாயக அரசு நிலைப்பதற்கு இந்தத் தன்னார்வ அரசு சாரா நிறுவனங்கள் எவ்வளவு இன்றியமையாதன என்பது புரியும். அவற்றைத்தான் இல்லாதொழிக்கப் பார்க்கின்றது இந்த அரசு. இதற்கு மாறாக, எங்கள் அயல் நாடாகிய இந்தியாவிலோ அரசு சாரா நிறுவனங்களின் நன்மைகளைக் கருதி அந்த அரசு தனது நிதிகளை வழங்கி புதிய நிறுவனங்களைத் தானே தோற்றுவிப்பதைக் காணலாம். இங்கோ, எமது அரசு தொண்டரமைப்புக்களின் ஒவ்வொரு திட்டங்களிலுமிருந்து வரியைத்தான் வசூல் செய்கின்றது, ஆனால் பதிலுக்கு ஒரு சதம் கொடுப்பதில்லை!

நகர்ப்புற மக்களுக்கு தொண்டரமைப்புக்களின் நன்மைகள் நேரடியாக அவ்வளவாகத் தெரியாவிட்டாலும் கிராமப்புற மக்களுக்கு அவற்றின் நன்மைகள் நன்றாகவே தெரிந்திருக்கின்றன. இவற்றின் செயற்பாடுகளினால் எத்தனையோ ஆயிரம் வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விளக்கேற்றப் பட்டிருக்கின்றது. நேரடியாகவன்றி பொதுவாகவும் மக்களுக்குப் பாதிப்பான பல சட்ட மசோதாக்களை பாராளு மன்றத்தில் எமது அரசியல்வாதிகள் நிறைவேற்றாமல் இவற்றின் நடவடிக்கைகள் தடுத்திருக்கின்றன. உள்ளுராட்சி நிர்வாகங்களில் ஊழல் நடவடிக்கைகளை நிறுத்தி மக்களுக்கு நீதி கிடைக்க இவை வழி செய்திருக்கின்றன. இன்றும்கூட, பாதுகாப்பு அமைச்சின் உத்தரவினை நாம் மீறியே தீருவோம் என்று யுத்தச் சங்கினை ஊதியிருக்கின்றன இந்நிறுவனங்கள்.

ஆயினும், இதனை ஏதோ அரசு சாரா நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையிலான போராக நாம் எண்ணக் கூடாது. மக்கள் மீது இலங்கை அரசு விதித்த யுத்தமாகவே இது கருதப்படவேண்டும். ஏனெனில் அரசு சாரா நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டால் அதனால் முழுமையாகப் பாதிக்கப்படப் போகின்றவர்கள் மக்களேயன்றி அரச உத்தியோகத்தர்களோ அரசியல் வாதிகளோ அல்ல. எனவே, நடப்பதை வெறுமனே பார்த்துக்கொண்டிராமல் மக்கள் இப்போராட்டத்தில் குதிக்க வேண்டும். தத்தமது ஊர்களில் கூட்டங்கள் நடத்தியும் பத்திரிகைகளுக்கு எழுதியும் பேசியும் தமது கருத்துக்களை வெளியிடவேண்டும். எமது நாட்டில் அழிந்து கொண்டு போகும் ஜனநாயகத்தினைக் காப்பாற்றும் போக்கின் முதல் படியாக இது இருக்கட்டும்.

"அடி என்னடி உலகம் இதில் எத்தனை கலகம்"

**சாந்தி சச்சிதானந்தம்**

நன்றி- குளோபல் தமிழ்ச் செய்திகள்

---

## மீள்குடியேற்ற சனாதிபதி ஆணைக்குழு வலுவிழந்தது - புதிய ஆணையகம் உருவாகும்?

மீள்குடியேற்றத்தை கண்காணிக்கவும் துரிதப்படுத்தவும் என உருவாக்கப்பட்டிருந்து சனாதிபதி ஆணைக்குழுவின் காலம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து அவ்வாணைக்குழு வலுவிழந்துள்ளது.

இதனையடுத்து சுமார் 23,000 இடம்யெர்ந்தோரினை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் தளம்பலடைந்துள்ளன.

இவ் 23,000 இடம்பெயர்தோரும் வடக்கு கிழக்கில் தற்காலிக வதிவிடங்களிலும், நிவாரண முகாம்களிலும் வசித்து வருகின்றனர்

இவர்களது மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்தும் நோக்குடன் புதிய ஆணையகம் ஒன்று உருவாக்கப்படும் எனத் தெரிகின்றது.

## இரட்டிப்பாகும் தபால் கட்டணங்கள்....

எதிர்வரும் முதலாம் திகதி முதல் தபால்க் கட்டணங்கள் இரட்டிப்பாகும் என தபால்திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண தபாலுக்கான தபால் முத்திரை ரூபா 5 ல் இருந்து 10 ஆக அதிகரிக்கப்படவுள்ளதுடன் 20 கிராம் நிறைகொண்ட வர்த்தக தபால் கட்டணம் ரூபா 5 ல் இருந்து 15 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

500 கிராம் நிறைகொண்ட பொதித்தபால் செலவு ரூபா 50 ல் இருந்து 90 ஆக அதிகரிக்கப்படவுள்ளதுடன் அதற்கும் மேல் ஒவ்வொரு 250 கிராமிற்கும் ரூபா 20 கட்டணமாக அறவிடப்படும்.

தபால் பைக்கான ஆண்டுக் கட்டணம் ரூபா 5,000 இல் இருந்து 9,000 ஆக மாற்றப்படவுள்ளது.

## உலக மூளை தினம்

### "பாவிக்காது விட்டால் பல வருத்தங்களின் இருப்பிடமாகும் மனித மூளை"

ஜூலை மாதம் 22ம் திகதியை உலக மூளை தினமாக உலக நரம்பியல் கழகம் அறிமுகம் செய்துள்ளது.

இத்தினம் தொடர்பாக இலங்கையில் நரம்பியல் வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கையில் மூளை பாவிக்கப்படாமல் இருந்தால் பல வருத்தங்களை உருவாக்கும் பொதியாகிவிடும் எனத் தெரிவித்துள்ளனர்.

வாசிப்பது, எழுதுவது, குறுக்கெழுத்துப் புதிர்களை விடுவிப்பது போன்றவை மூளைக்கான பயிற்சிகளாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு வருமா!!!



போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் போரின் இறுதிக்கட்டத்தில் போர்க்குற்றங்கள் நிகழ்ந்தனவா என்பது குறித்து விசாரிக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' கடந்த ஜுலை 15ஆம் திகதியிட்டு வெளியிட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இதற்கான ஆணையை பிறப்பித்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் அரசாங்கம் இதுவரை மறுத்துவந்த ஒரு விடயத்துக்கு இணங்கிப் போயுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது, போர்க்குற்றங்கள் ஏதும் நிகழவில்லையென்றும் பொதுமக்கள் ஒருவர் கூட கொல்லப்படவில்லையென்றும் இதுவரை அரசாங்கம் கூறி வந்தது. அத்துடன், போர்க்குற்றங்கள் குறித்த விசாரணையை நடத்தவும் மறுத்துவந்தது.

ஆனால், இப்போது போர்க்குற்ற விசாரணை என்பதை நேரடியாக வெளிப்படுத்தாவிட்டாலும், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள், மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

இதன் மூலம் அரசாங்கம் தனது பிடிவாதத்திலிருந்து சற்று தளர்ந்துபோயுள்ளது என்றுதான் கூறவேண்டும். இந்தப் படியிறக்கம் நிகழ்ந்ததற்கு சர்வதேச அழுத்தங்கள்தான் காரணமென்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

போர் முடிந்து 05 வருடங்களுக்கு மேலாகியும் எடுக்கப்படாத ஒரு நடவடிக்கைக்கு அரசாங்கம் இப்போது இறங்கி வந்துள்ளது. அதுவும் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில்தான் அரசாங்கம் இந்த உள்ளூர் விசாரணைக்கான ஆணையை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரினால் உருவாக்கப்பட்ட சன்ட்ரா பெய்டாஸ் தலைமையிலான விசாரணைக்குழு - மார்ட்டி அதிசாரி, அஸ்மா ஜஹாங்கீர், சில்வியா கார்ட்ரைட் ஆகிய சர்வதேச நிபுணர்களின் வழிகாட்டலுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ள தருணத்தில்தான் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுவரை காலமும் பொறுத்திருந்துவிட்டு இப்போது மட்டும் திடீரென இலங்கை அரசாங்கத்துக்கு எப்படி இந்தப் பொறுப்பு வந்தது?

இலங்கை அரசாங்கம் சுயமாக, எவ்வித அழுத்தங்களுமின்றி இம்முடிவை எடுத்திருந்ததென்று கூறமுடியாது. அவ்வாறாயின், இந்த முடிவு எப்போதோ எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புறநிலை அழுத்தங்கள், குறிப்பாக மிக வலிமையான சர்வதேச விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அது செயற்படத் தொடங்கியுள்ள நிலையில்தான், அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது. எனவே, சர்வதேச விசாரணையின் அழுத்தங்களே இந்த முடிவுக்கான முதன்மையான காரணமென்பதை உறுதியாக நம்பலாம்.

சர்வதேச விசாரணையொன்று தொடங்கப்பட்டுள்ள நிலையில், அதனைப் பலவீனப்படுத்துவதற்கு அல்லது அதன் முக்கியத்துவத்தை குறைப்பதற்கு இந்த விசாரணைகளை அரசாங்கம் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. இலங்கை அரசாங்கத்தால் வழக்கமாகக் கையாளப்படும் அதே தந்திரோபாயம் இங்கும் கையாளப்பட்டுள்ளது. கோடு ஒன்றை சிறிதாக்க வேண்டுமானால், அதனருகே பெரியதொரு கோடு போடுவது வழக்கம். அதுபோலத்தான், சர்வதேச விசாரணையின் முக்கியத்துவத்தை குறைப்பதற்கு அல்லது அதனை சர்வதேச அரங்கில் பலவீனப்படுத்துவதற்கு தானும் ஓர் ஆணைக்குழுவை நியமித்துள்ளது அரசாங்கம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை போலவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' தானும் ஒரு சட்ட நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவை உருவாக்கியிருக்கிறார்.

எனினும், இந்த விசாரணைக்குழு மற்றும் ஆலோசனைக்குழு மூலமாக அரசாங்கம் எதனைச் சாதிக்க முனைகிறது?

போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரணை நடத்தி, தவறிழைத்தவர்கள் என்று இனங்காணப்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கின்ற அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்படுகிறதா? அல்லது சர்வதேச விசாரணையின் முக்கியத்துவத்தை குறைத்து அதனால் ஏற்பட்ட அழுத்தங்களிலிருந்து விடுபட்டு, சர்வதேச சமூகத்தை திசை திருப்புவதற்காக இந்த நடவடிக்கை எடுக்க முனைந்துள்ளதா?

இதில் முதலாவது காரணத்துக்காக அரசாங்கம் இந்த விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தால் அது நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்காக, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்று கருதலாம்.

ஆனால், அவ்வாறு கருதுவதற்கு ஏற்றதொரு புறச்சூழல் அமையவுமில்லை, அவ்வாறு இந்த அரசாங்கத்தை நம்ப முடியவுமில்லை. ஏனென்றால் அத்தகையதொரு எண்ணம் அரசாங்கத்திடம் இருந்திருந்தால், இந்த விசாரணைக்குழுவை நியமிப்பதற்கு 05 வருடங்களுக்கும் மேல் தேவைப்பட்டிருக்காது. அதனை எப்போதோ செய்திருக்கலாம்.

அவ்வாறு, முன்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இன்று அரசாங்கம் சர்வதேச அளவில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் கூட ஏற்பட்டிருக்காது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2012, 2013ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நம்பகமான, சுதந்திரமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை மட்டும்தான் வலியுறுத்தியிருந்தன.

ஆனால், அந்தத் தீர்மானங்களை ஏற்கமுடியாது என்றும் அது பக்கச்சார்பானது என்றும் அரசாங்கம் நிராகரித்திருந்ததை மறந்துவிட முடியாது.

2012ஆம் ஆண்டு முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் கடைசியாக சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்படும்வரையில் நம்பகமான ஓர் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கான போதிய காலஅவகாசம் அரசாங்கத்திடம் இருந்தது.

அதனைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியதால்தான், சர்வதேச விசாரணைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சர்வதேச விசாரணைக்குழு உருவாக்கப்பட மூல காரணமாக இருந்த அமெரிக்காவே, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சுலபமானது என்று அண்மைக்காலம்வரை கூறி வந்திருக்கிறது.

அதையெல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்த அரசாங்கம், இப்போது திடீரென ஓர் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை சர்வதேச நிபுணர்களின் ஆலோசனை உதவி பெறும் வகையில் நியமித்துள்ளது.

இதனை எந்தவகையிலும் நம்பகமான உள்நாட்டு விசாரணை மூலம் பொறுப்புக்கூறல் விவகாரத்தை தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பமாக எடுத்துக்கொள்ள முடியாது. வேறு வழியின்றி சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்வதற்கான ஓர் உத்தியாகவே இதனைக் கருதவேண்டும்.

சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிப்பதற்காக, அதன் கவனத்தை திசை திருப்புவதற்காக, சர்வதேச விசாரணையின் முக்கியத்துவத்தை குறைப்பதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால் அது அரசாங்கத்துக்கு எந்தளவுக்கு கைகொடுக்கும் என்றும் பார்த்துவிடலாம்.

ஆலோசனை வழங்குவதற்கான வெளிநாட்டு நிபுணர் குழுவுடன் கூடிய உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றை அரசாங்கம் உருவாக்கியிருப்பினும் இந்த விசாரணைக்குழு எந்தளவுக்கு நம்பகமானது, சுதந்திரமானது என்பதை அதுவே செயல்முறையில் வெளிப்படுத்தியாக வேண்டும்.

அதற்கு இந்த ஆணைக்குழு எதையும் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதை விட அரசாங்கம் எதையும் செய்யாமல், தலையீடு செய்யாமல் இருக்கவேண்டும் என்பதே முக்கியமானது.

ஆனால், ஆரம்பத்திலேயே அரசாங்கம் வெளிநாட்டு நிபுணர்குழு வெறுமனே ஆலோசனை வழங்குவதற்கு மட்டும்தான் என்றும் அந்த ஆலோசனையை ஏற்பதா, இல்லையா என்று தாமே தீர்மானிப்போம் என்று கூறிவிட்டது.

இது இந்த விசாரணைக்குழுவின் பெறுமானத்தை மட்டுமன்றி, வெளிநாட்டு நிபுணர் குழுவினது பணியின் தரத்தையும் குறைத்துவிட்டது.

அரசாங்கத்தின் விசாரணைக்குழு தனியே உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் தகவல்களையும் சாட்சியங்களையும் திரட்டினால்தான் அது முழுமை பெறும். அதற்கு அரசாங்கம் இடமளிக்குமா என்றும் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கும்.

எவ்வாறாயினும், இந்த விசாரணையின் மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தேயுள்ளது. அத்தகைய நம்பகத்தன்மையை சர்வதேசம் பெற்றுவிட்டால் கூட, தற்போது முன்னெடுக்கப்படும் சர்வதேச விசாரணையின் முக்கியத்துவம் குறைந்து போய் விடாது.

ஏனென்றால், சர்வதேச சமூகத்துக்கு உள்ள முக்கியமான பிரச்சினை இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பதல்ல.

அந்த விசாரணையின் முடிவில் பெறப்படும் அறிக்கையை வைத்து அடுத்த நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தே சர்வதேச சமூகத்துக்கு குறிப்பாக மேற்குலகிற்கு கவலை.

ஏனென்றால், விசாரணை அறிக்கையை வைத்து அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்குச் செல்ல வேண்டும். ஆனால், அங்கே அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படக்கூடிய சீனாவும் ர'யாவும் இருப்பதால் எதையும் செய்ய முடியாது.

எனவே எவரேனும் போர்க்குற்றங்கள் செய்துள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டால், போர்க்குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை விசாரணைகள் கண்டறிந்தால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பது சிக்கலானது.

அதனால்தான், அமெரிக்கா நம்பகமான உள்நாட்டுப் பொறிமுறை மூலம் பிரச்சினையை தீர்க்கலாம் என்று ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறது.

உள்நாட்டு விசாரணைகள் நம்பகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தால், சர்வதேச விசாரணையின் பெறுபேற்றை ஒட்டியே அதன் அறிக்கையும் வரவேண்டும். மாறாக, இரண்டுமே வேறுபட்டால் மீண்டும் சிக்கல் உருவாகும்.

இரண்டு அறிக்கைகளுமே ஒன்றாக அமைந்துவிட்டால், அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை சுலபமாகிவிடும். இதற்கிடையே, இந்த உள்நாட்டு விசாரணையை தொடங்குவதால் சர்வதேச கண்காணிப்பிலிருந்து தப்பிவிடலாம் அல்லது பிரச்சினையை திசை திருப்பி விடலாம் என்று அரசாங்கம் மனப்பால் குடித்தால் அது தவறாகும்.

ஏனென்றால் இந்த உள்நாட்டு விசாரணையை அரசாங்கம் விரும்பினாலும் சரி, விரும்பாது போனாலும் சரி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் கண்காணிக்கப் போகிறது.

அதற்கான ஆணை ஏற்கெனவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே வழங்கப்பட்டு விட்டது.

அதாவது, எந்தவொரு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையினதும் விசாரணையையும் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த உள்நாட்டு விசாரணைகளால் சர்வதேச கவனத்தை திசை திருப்பமுடியாது. இன்னும் உன்னிப்பாக உலகம் இதனைக் கண்காணிக்கும்.

அதேவேளை, காலதாமதமாக நியமிக்கப்பட்டுள்ளபோதும், இந்த விசாரணை நம்பகமான வகையில் இடம்பெற வேண்டுமென்று உலகம் விரும்பினாலும், இன்னொன்றையும் இங்கு கவனிக்கவேண்டியுள்ளது.

அதாவது அரசாங்கம் இந்த விசாரணைக்குழுவை அறிவித்து ஒரு வாரத்துக்கு மேலாகியும், இது பற்றி எந்தவொரு நாடுமே வரவேற்று அறிக்கை வெளியிடவில்லை.

உள்நாட்டுப் பொறிமுறையை வலியுறுத்திய இலங்கைக்கு ஆதரவாக நின்ற நாடுகள் கூட வாய் திறக்கவில்லை.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் மட்டும்தான், இதனை வரவேற்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அதுவும் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குத் தான் பதிலளித்துள்ளார்.

இதிலிருந்து எதுவும் உரிய காலத்துடன் முயற்சி எடுக்கப்பட்டால்தான் அதற்கு வரவேற்பு கிடைக்கும் என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்கம் இந்த உண்மையை உணராத காரணத்தினால்தான், உள்நாட்டு விசாரணைக்குழுவை அமைக்க நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

ஒருவேளை அரசாங்கம் இந்த விசாரணைக்குழுவை தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காகப் பயன்படுத்தினால் கூட, அதனையும் உலகம் ஏற்றுக்கொள்ளாது.

எவ்வாறாயினும், அரசாங்கம் இந்த விசாரணைக்குழுவை அமைத்துள்ளதன் மூலம் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து விட்டது.

இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை நியாயமானதாக, நேர்மையானதாக அமைந்தாலும், அரசாங்கத்துக்கு சிக்கலாகவே அமையும்.

ஏனென்றால், அதன் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களுக்காக அது பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

இல்லையேல், இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை நம்பகமற்றதாக, பக்கச்சார்பானதாக அமைந்தால் அதுவும் கூட அரசாங்கத்தை இன்னும் நெருக்கடியில் தள்ளிவிடும். சர்வதேசத்தை ஏமாற்ற மேற்கொண்ட முயற்சியாக கருதப்படுவதுடன், அரசாங்கத்துக்கு அவப்பெயரையும் தேடித்தரும். இப்போதைய நிலையில் இந்த உள்நாட்டு விசாரணை என்ற களத்தில் அரசாங்கம் இறங்கிவிட்டது.

இது கத்தி மீது நடக்கின்ற பயணம். கத்தி மீது நடந்தாலும், இந்தப் பயணத்தின் முடிவு அரசாங்கத்தை இக்கட்டிலிருந்து விடுவிக்கப் போவதில்லை.

மாறாக சட்டிக்குள் இருப்பதா, அடுப்புக்குள் விழுவதா என்பதைத்தான் தீர்மானிக்கப் போகிறது.

**நன்றி - கே.சஞ்சயன் (www.tamilmirror.lk)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்லுகிறது இந்த பாதை


...நாட்டு நடப்பு...

- பாலையூற்றான் -

உலகத்தில் வாழப் பிறந்த நாம் எமது வாழ்க்கையை சிறப்பாக, அதுவும் எமக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள பல வழிகளை நாமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றோம். சிலர் சிறந்த விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்க்கையின் முன்னேற்றம் கருதி நன்மையான வழிவகைகளை தேர்ந்தெடுக்கும் அதேவேளையில் இன்னும் சிலர் அதே நோக்கத்திற்காக தீய வழிவகைகளை தேர்ந்தெடுத்து அதனூடாக முன்னேற்றம் அடைய முயற்சித்து வருகின்றனர்.

நோக்கம் ஒன்றாக இருந்தாலும் அவற்றை அடைய எடுக்கும் வழிமுறைகள் தான் வித்தியாசங்களை காட்டுகின்றன. வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்பதற்காக எதையும் செய்யலாம் என்ற கோட்பாட்டை ஆதரிக்கவும் முடியாது. அதே வேளை அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

அண்மையில் எமது நாட்டின் மாண்புமிகு பிரதமர் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டார் என்ற பாரிய குற்றச்சாட்டு அவருக்கெதிராக முன்வைக்கப்பட்ட



வேளையில் அது அவரின் செயலாளரின் கபடத்தனமான நடவடிக்கை என காரணம் கூறப்பட்டது.

ஆனால் அன்று அரசியல் வட்டாரத்தில் பிடித்திருந்த சூடு சற்று தணிந்து அந்த பிரச்சினை இறுதியில் புஸ்வாணமாக மாறியது. 'அப்படியொன்றை செய்தால்தான் நம் நாட்டில் அரசியல் நடத்தலாம். மேலும் அரசியலுக்கு இலட்சக்கணக்கில் பணம் தேவை. அதற்கு ஒரே வழி போதைவஸ்து' என பலரால் காரணங்களும் முன்வைக்கப்பட்டன.

ஆட்சியின் ஸ்திர நிலையை தக்க வைக்க பணம் தேவை. அப்பணத்தை சுளை சுளையாகவும், இலகுவாகவும் சம்பாதிக்க இந்த நாட்டிலென்ன எந்த நாட்டுக்கும் போதைவஸ்து வியாபாரமே சிறந்ததென பலர் எடுத்துக் கூறுகின்றனர்.

எனவே அரசின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அமைச்சர்கள் ஆகியோர் புரிகின்ற அவ்விதமான தவறுகள் தொடர்பில் எவரும் அலட்டிக் கொள்வதே இல்லை. மேலும் அவ்விதமானவைகள் இடம்பெற்றால் அவற்றை கண்டும் காணாத மாதிரி நடந்து கொள்வது அல்லது அவற்றை மூடி மறைப்பது போன்ற கைங்கரியங்கள் இன்று நாடளாவிய ரீதியில் எங்கும் இடம் பெற்று வரும் மிக சர்வ சாதாரண நிகழ்வுகளே.

மேலும் குறித்த முறைப்பாடு எற்த மட்டத்தில் சென்றாலும் அதை சமாளிக்கக் கூடிய திறமை, வல்லமை, செல்வாக்கு அனைத்தும் தீயவற்றை புரிபவர்களிடமும் அதை ஆதரிப்பவர்களிடமும் தாராளமுண்டு.

இவ்விதமாக தீயவைகள் ஊடாக வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற அவர் அந்தஸ்த்தில் பெரியவர்கள் மட்டத்தில் மாத்திரமல்ல சிறிய தரத்திலுள்ளவர்களிடையும் உண்டு.

அக்கிராமத்தில் பலர் பல மட்டங்களில் வாழ்ந்து வரும் வேளையில் சிறிய தரங்களிலுள்ளவர்களும் தாமும் பெரிய அந்தஸ்த்தை சார்ந்தவர்கள் என காட்டிக் கொள்வதில் பெரும் சிரத்தை எடுத்துவருவது தண்டிக்கப்பட வேண்டிய தவறுகளை மேற்கொள்வதே மிக தவறானதாகும்.

அக்குடும்பம் அப்பகுதியில் மிக வறிய தரத்தை சார்ந்தாலும், அங்குள்ளவர்களை விட தாம் எதிலும் குறைந்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்க அவர்கள் எடுக்கும் பிரயத்தனங்களுக்கு குறைவே இல்லை.

'ஊர்க்குருவி உயரப்பறந்தாலும் அது பருந்துக்கு சமனாகுமா?' என பெரியோர்கள் தெரியாமலா கூறிவைத்திருக்கிறார்கள். அவ்விதம் ஊர்க்குருவி உயரப் பறந்தால் என்ன நடக்கும் என்பதும் ஊர்க்குருவிக்கு தெரியாமலுமல்ல. அவ்விதம் தெரிந்து பறந்த பல குரவிகள் காற்றோடு காற்றாக கண்ணுக்கு தெரியாமலே காணாமல் போயும் இருக்கின்றன. அது மாத்திரமல்ல அவற்றுக்கு நடக்கும் இயற்கை அனர்த்தத்தை விட பெரும் பட்சிகளின் பசிக்கும் இரையான பல கதைகள் உண்டு.

அக்குடும்பத்தின் தலைவன் மாத்திரமல்ல ஒட்டுமொத்த குடும்பத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் அருவருப்பானவை என்பதை சகலரும் அங்கு புரிந்துள்ளனர். அதனால் அக்குடும்பத்தினருடன் எவரும் நெருங்கிய உறவுகளை வைத்திருப்பதே இல்லை.

மிக அண்மையில் அந்த வீட்டில் திருமண வைபவம் ஒன்று இடம்பெற்றது. மிக குறைந்த எண்ணிக்கையினரே அவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். மிக டாம்பீகமான ஹொட்டலொன்றில் வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டாலும் அந்த ஹொட்டலின் கௌரவத்தைக் கூட காப்பாற்றும் அளவுக்கு பங்களித்தவர்களின் எண்ணிக்கை இருக்கவில்லை.

அந்த குடும்பத்தில் பெண் எடுத்தவர் பிற மாவட்டத்தைச் சார்ந்தவர் மாத்திரமல்ல பிற இனத்தையும் சார்ந்தவர். அவர் தரப்பில் திருமண வைபவத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கை அவருடன் சேர்த்து சுமார் ஆறு பேர்களே. அந்த ஊரில் குறித்த குடும்பத்தினரைப் பற்றி எவரிடமும் விசாரித்துப் பார்க்காமல் சம்பந்தம் வைத்துக் கொண்டவர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்? அவரும் பெண் வீட்டாரின் தரத்தில் அல்லது அதைவிட குறைந்தவராகத்தான் இருக்க வேண்டுமென அங்கு அயலவர்கள் ஆளுக்காள் பேசிக் கொள்ளத் தவறவில்லை. மேலும் அக்குடும்பத்தில் ஏற்கனவே இடம்பெற்ற பல திருமணங்கள் முற்றிலும் முறையற்றவை என்பதால் இறுதியாக இடம்பெற்ற அத்திருமணத்தைக் கூட பெரிதாக எவரும் விமர்சிக்க முன்வரவில்லை. குடும்பத் தலைவன் தொடக்கம் அவனது பேரப்பிள்ளைகள் வரை அந்த ஊரில் நல்ல அபிப்பிராயத்தை பெற்றவர்களல்ல. ஒட்டு மொத்தக் குடும்பமும் வித்தியாசமான, கீழ்த்தரமான நடவடிக்கைகளை கொண்டவர்களாகவே இருந்து வந்தனர்.

குடும்பத் தலைவன் எப்பொழுதும் கையடக்கத் தொலைபேசியை காதுக்கருகே வைத்துக்கொண்டே செல்வான். அதில் பணமில்லாமல், செயலிழந்து இருந்தாலும் பிறர் தன்னை பெரிதாக நினைக்க வேண்டுமென்பதற்காக 'பந்தா'வாக நடந்து கொள்வான். அவன் மாத்திரமல்ல முழுக்குடும்பத்தினரும் அவ்விதமே நடந்து கொள்வார்கள்.

ஒரு நாள் வழிப்போக்கரொருவர் அவனின் செயலை நன்கு அவதானித்துவிட்டு 'மணிக்கணக்கில் இப்படி தொலைபேசியில் கதைக்கிறீர்களே, அப்படி என்ன தான் கதைக்கிறீர்கள்?' எனக் கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான். 'நான் ஒரு சமயப் போதகன் பலர் தங்களது கஷ்டங்களை என்னிடம் கூறி தங்களுக்காக இறைவனிடம் ஜெபிக்கும்படி கூறுவார்கள். அவர்களுக்காக எனது தொலைபேசி மூலம் ஜெபிக்கின்றேன்.'

'அப்படியா நல்ல விசயம் நன்றாக ஜெபியுங்கள்' என்று கூறி விட்டு அவ் வழிப்போக்கர் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

அதே வழியால் இன்னுமொரு நாள் அவர் சென்று கொண்டிருக்கும் போது அந்தச் சமயப் பேதகனை பலர் கையாலும் காலாலும் மாறி, மாறி தாக்கினர். தாக்குப் பிடிக்காமல் அவன் அங்கிருந்து ஓடினான். அதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்.

உண்மையில் அவன் பிறருக்காக தொலைபேசியில் ஜெபிக்கவில்லை. பல பெண்களோடு பாலியல் சம்பந்தமான இச்சையான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தான். சிலர் அவனது காமப் பேச்சுக்களில் மயங்கினாலும் பலர் விழிப்பாக இருந்து அவனுக்கு தக்க பாடம் புகட்டினர். அந்தப் பாடம் தான் அவனுக்கு அன்று கிடைத்த அடி உதைகள். பல பேரப் பிள்ளைகளுக்கு பேரனான அவனிடம் இருந்த வித்தியாசமான பாலியல் ஆசைக்கு புனிதமான மதம் ஒன்றினை ஊடகமாக உபயோகித்ததுமல்லாமல் பிறரின் மன்றாட்டுக்கள், வேண்டுதல்கள் ஆகியவற்றுக்காக ஜெபிக்கும் போதகன் என தன்னை ஒரு மதத்தின் பேரால் அடையாளப்படுத்தியதை அந்த இறைவன் கூட மன்னிப்பாரா?






## விமானக்கதவை திறக்க முயன்ற பயணி

30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்றின் வெளிக்கதவை டாய்லட் கதவு என நினைத்து குடிபோதையில் திறக்க முயன்ற பயணி ஒருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டார். Tomasz Mucha அவர்கள் போதையில் தெரியாமல் இந்த தவறை செய்துவிட்டதாகவும், எவ்வித தீய எண்ணத்துடன் அவர் இந்த காரியத்தை செய்யவில்லை என்று அவருடைய வழக்கறிஞர் வாதாடியதைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

## பேட்மான் பனிப்பாறை




கனடாவின் நியூபவுண்லாண்ட் நகரில், Round Lake, Ontario என்ற பகுதியில் தோன்றிய பனிப்பாறை பார்ப்பதற்கு பேட்மேன் போலவே தத்ரூபமாக உள்ளது.

## திருடிய உடைகளுடன் புகைப்படம்

அமெரிக்காவைச் சேர்ந்த Danielle Saxton எட்டு மாத கர்ப்பிணிப்பெண் கடந்த மாதம் நகைகள் மற்றும் துணிகள் வாங்குவதற்கு சென்றார். சில துணிகளை மட்டும் வாங்கிவிட்டு ஒருசில துணிகளையும், நகைகளையும் அவர் திருடியதாக கண்காணிப்பு கேமரா மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து போலீஸாரிடம் புகார் செய்த கடை ஊழியர்கள், கண்காணிப்பு கேமிராவில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படத்தை ஃபேஸ்புக்கில் பதிவு செய்ய முயன்றனர். அப்போது பொருட்களை திருடிய அந்த கர்ப்பிணி பெண் தான் திருடியவற்றை அணிந்த புகைப்படத்தை ஃபேஸ்புக்கில் பதிவு செய்தார். இதைக் கண்ட பொலிஸார் அவரை உடனடியாக கைது செய்யப்பட்டார்.

## இளவரசரின் பரிசு.



இங்கிலாந்து அரச குடும்பத்தின் குட்டி இளவரசர் ஜார்ஜ் அவர்களின் முதலாவது பிறந்தநாளுக்கு பரிசு கொடுப்பதற்காக £1மில்லியன் மதிப்புள்ள நெயில்கட்டர் (Nail Cutter) ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முற்றிலும் 18 கேரட் தங்கத்தினால் ஆன இந்த நெயில்கட்டரின் கைப்பிடியில் £2,000 மதிப்புள்ள 350 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளது.

## புதிய காரின் விபரீதம்



சீனாவை சேர்ந்த Ye Chia என்ற 29 வயது பெண்ணின் நீண்ட நாள் ஆசையினால் கடந்த வாரம் ஒரு புதிய காரை வாங்கினார். அந்த காரை தன்னுடைய தாயாரிடம் காண்பிக்க காரில் கணவர் மற்றும் தனது இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தாய் வீட்டிற்கு சென்றார்.

வீடு அருகில் வந்தபின்னர் காரின் பிரேக்கை அழுத்துவதற்கு பதிலாக ஆக்சிலேட்டரை பதட்டத்தில் அழுத்திவிட்டார். இதனால் கார் மிகவேகமாக அவருடைய தாயாரின் வீட்டிற்குள் புகுந்தது. இதன் காரணமாக வீட்டின் இரண்டு அறைகள் இடிந்து விழுந்தது. புத்தம் புதிய காருடன் வரும் மகளை எதிர்பார்த்து நின்றிருந்த தாயாருக்கு இது கடும் அதிர்ச்சியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அவனும் நானும்

ஒன்பது மணிக்கெல்லாம் வெயில் இப்படிச் சுள்ளுன்னு மண்டையப் பிளந்தா, மிச்ச பொழுத எப்படி ஓட்டுறதுன்னு யோசிச்சுக்கிட்டே மெதுவாய் எழுந்து வெறுப்புடன்



கடலை வண்டியைத் தள்ளினான் வேலாயுதம். கொழும்பு பஸ்ஸ்டாண்ட் எப்பவும் இப்படிக் கூட்டமாத்தான் இருக்கும். ஜனங்க வர்ற 'பஸ்ல இறங்குறதும், போற பஸ்கள்ல ஏறிப்போறதும் வேடிக்கையான வாடிக்கை நிகழ்ச்சிதான். ஈசப்புத்துக்குள்ள இருந்து ஈச சர்சர்ன்னு வர்ற மாதிரி இந்த ஜனங்க பஸ்ஸ்டாண்டுல இருக்கிற வாசல் வழியாக வர்றதும் போறதுமாக இருக்கும்.

திருகோணமலை, வவுனியா, கண்டி, மட்டக்களப்பு என போர்டு தாங்கின பஸ்கள் முகவரியை முகத்தில் எழுதி ஒட்டிக்கொண்டு வரிசையாக சிவப்பு, ஊதா, பச்சைன்னு கலர்கலரா நின்றன. எப்பவுமே இப்படி எல்லாப் பஸ்சும் ஒரே சமயத்துல இருக்கிறது இல்லை. வரும் போகும். சில சமயங்கள்ள ஒரு பஸ்கூட இல்லாம பஸ் ஸ்டாண்டே வெறிச்சோடிக் கிடக்கும்.

வரிசையா நின்னு க்கிட்டிருந்த பஸ் களுக்கு நடுவால வண்டியத் தள்ளிப்போயி, "கடலை, சூடா... வேர்க்கடலை"ன்னு கத்தினான் வேலாயுதம். ஏழு மணிக்கு பஸ்ஸ்டாண்டுக்குள்ள நுழைஞ்சவனுக்கு இப்பவரைக்கும் ரெண்டு பொட்டலம்தான் வித்து தகர டப்பாவுல ரெண்டு நூறு ரூபாதான் கிடந்துச்சு. இந்த ரெண்டு நூறு ரூபாய மூக்கையாட்ட கொடுத்துட்டு கட்டண கழிப்பறையில போயி ஒன்னுக்கு அடிக்கத்தான் முடியும். மூக்கையா மகன் கணேசன் இருந்தா ரெண்டு தடவை மனசா போயிக்கன்னு விடுவான். முன்னாடிபோல் சந்து, பொந்தெல்லாம் இல்லாம ரொம்ப கஷ்டமாயிருக்கு. ஒரு நாளைக்கு ஒன்னுக்குப் போகவே ஆறு 'ரூபாயா செலவழிக்க முடியும்? சுத்தம் சுகாதாரம்ன்னு சொல்லி வரிசையா கடைகளையும் கட்டி, சிமிண்ட் தளத்தையும் போட்டுவச்சிருக்கு. அப்பப்ப வெளியில சந்தைப்பேட்டைப் பக்கம் புளியமரத்துக்கு பின்னாடி ஓடிப்போயிட்டு வந்துட்டா, அப்பாடா... ரெண்டு ரூபாய மிச்சம் பண்ணியாச்சுன்னு மனசத் தேத்திக்குவான் வேலாயுதம்.

பஸ்ஸ்டாண்டுக்குள்ள இருக்கிற ஒரே ஓட்டல் அன்னபூர்ணா மெஸ்தான். அதுல போண்டா வையும், பூரியையும் சுட்டு கண்ணாடி டப்பாவுக்குள்ள பார்வையா அடுக்கி வச்சிருந்தாக. அதைப் பார்த்த வேலாயுதத்துக்கு எச்சில் ஊறி, வயிறு பசிக்க ஆரம்பித்தது. மனதிற்குள் மாரியம்மாளைத் திட்டினான். "பாவிமக கஞ்சிய தூக்குல ஊத்தி எடுத்தார இம்புட்டு நேரமாக்குறாளே"ன்னு.

மாரியம்மாவ நெனச்சுக்கிட்டே மறுபடியும் பஸ்ஸ்டாண்டை, "கடலை, வேர்க்கடலை"ன்னு கத்திக்கிட்டே வண்டியில இருந்த தகரத்தை கட்டையால தட்டிக்கிட்டே சுத்தி வந்தான். ஆனா யாருமே வாங்கலை. அவுக அவுக வேலையாத்தான் அங்கிட்டும், இங்கிட்டும் அலையிறாகளே தவிர கடலை, கடலைன்னு கத்துறவனக் கவனிக்க ஆள் இல்லை. மழைக்காலமா இருந்தா சுடச்சுட யாவாரமும் தூள் பறக்கும். ஆனா இந்த வெயில் காலத்துல வெள்ளரிக்காய் விக்கிறவுகளுக்குத் தான் யாவாரமே. பள்ளிக்கூடம் போயிட்டு வந்து, யூனிபார்ம்மைக்கூட மாத்தாம சின்ன பிள்ளைகளும், பையன்களும் ரப்பர்பேண்ட் பாக்கெட்டை வாங்கி மூணு பிஞ்சை ஒண்ணா மூடுஞ்சு ரெண்டு ரூபாயின்னு வித்துப்புடுதுக. ஜனங்களும் வெயிலுக்கு நல்லதுன்னு வாங்கித் தின்னுதுக.

பஸ்ஸ்டாண்டுக்குள்ள வேலாயுதம் தள்ளுவண்டி போல இன்னும் ரெண்டு வண்டி இருக்குது. எல்லாருமே கடலை வித்தவுகதான். சுப்பையாவும், சோணையும் வேலாயுதத்தைப் போல கடலையை மட்டுமே நம்பி யாவாரத்துல இறங்க மாட்டானுங்க. சுப்பையா சீசனுக்கு ஏத்தபடி தண்ணிப்பழம், நெல்லிக்காய், மாங்காய், எலந்தபழம், பனங்கிழங்கு, ஆலவள்ளிக் கிழங்குன்னு ரெண்டு மூணு அயிட்டத்தை வச்சுக்கிட்டுத்தான் யாவாரம் பண்ணுவான். சோணையும் அப்படித்தான். இப்ப, அவிச்ச பட்டாணி, சுண்டல்ன்னு மாறிக்கிட்டான். வேலாயுதத்தால மட்டும் பத்து வருஷமா பார்க்குற தொழிலை மாத்திக்க முடியல.

எப்படியோ மூணு வண்டிக்காரனும் முட்டிக்காம, முறைச்சுக்காம பஸ்ஸ்டாண்டே உலகம்ன்னு சுத்தி, சுத்தி வந்து கத்திக்கிட்டே பொழப்பை ஓட்டிக்கிட்டு இருக்கானுங்க. வேலாயுதத்துக்குக் கால்ல போட்டிருந்த ரப்பர் செருப்பு தேய்ஞ்சு, அஞ்சு விரல் தடத்துலையும் சின்ன ஓட்டைக்கூட விழுந்திருச்சு. யாவாரம் நல்லா நடந்தா பாய் கடையில அம்பது ரூபா ரப்பர் செருப்பு வாங்கிப் போட்டுக்கிடணும்ன்னு ரொம்ப நாளா மனசுக்குள்ள நெனச்சுக்கிட்டே, பாய் கடையில போயி அப்பப்ப வந்து இறங்கின புது செருப்புகளைப் பார்த்துக்கிட்டும், வெலையை விசாரிச்சுக்கிட்டும் இருப்பான் வேலாயுதம்.

பஸ் கிளம்ப கொஞ்சம் கூட்டம் கொறஞ்சு காத்தும் வந்துச்சு. உடனேயே அடுத்த பஸ் வரவும் ஜனங்க சீட் போடுறதுக்கு முண்டி, மோதி வாசல், ஜன்னல்ன்னு திறந்திருக்கிற பக்கமெல்லாம் ஏறியும், சண்டைகளைப் போட்டும் கசகசன்னு ஒரே இரைச்சலாகிப் போச்சு. இந்த லட்சணத்துல போன வாரம் புதுசா ஃபேன்ஸிக்கடை தொறந்திருக்கிற அய்யப்பன் வேற விடாம டேப்பைப் போட்டு மக்களுக்கு தலைவலிய வரவச்சுக்கிட்டு இருந்தான்.

அய்யப்பன் கடை வந்த ஒரு வாரத்துல ஏற்கனவே கடை வச்சிருந்த மணிக்கு யாவாரம் கொஞ்சம் டல்லுதான். அய்யப்பன் சல்லிசா தர்றதோட குங்குமச்சிமிழ், டம்ளர், தட்டு, கிண்ணம்ன்னு எவர்சில்வர் பொருட்களை கிப்ட்ன்னு சொல்லிக் கொடுத்து ஜனங்களைக் கவர் பண்ண ஆரம்பிச்சுட்டான். மாரியம்மா கூட பிள்ளைகளுக்கு வளையலு, பொட்டுன்னு வாங்கிட்டு கிப்ட்டா கிண்ணம் வாங்கிட்டு வந்துட்டா. மணி எப்பவும் போல ரோஸ், பச்சை, சிவப்புன்னு கலர்கலரா குடங்களைக் கட்டி தொங்கவிட்டுக்கிட்டு "வாங்க, வாங்க"ன்னு கூவிக்கிட்டுத்தான் இருக்கான்.

சரியா ஆவி வராம இருக்கவே வேலாயுதம் குனிஞ்சு வண்டிக்குக் கீழ பார்த்தான். ஸ்டவ்வு ஒழுங்கா எறியமாட்டேன்னு அடம்பிடிக்குது. அத மாத்தணும். வண்டியில இருக்குற நாலு சக்கரமும் பேருக்குத்தான் சுத்துது. அதுகள சரி பண்ணணும்னு யோசிச்சுக்கிட்டே ஸ்டவ்வைக் கூட்டி வச்சுட்டு, அதுமேல இருக்குற ஈயப்பானையில பாட்டில்ல இருந்து தண்ணிய ஊத்தினான். பானையில இருக்கிற தண்ணி ஆவியாகி வண்டிமேல விரிச்சிருக்கிற சாக்குல பட்டு, அவிச்சகடலை எப்பவுமே சூடா இருக்கிறதுக்குத்தான் இந்த ஏற்பாடெல்லாம். வண்டி மேல சாக்குல கெடக்குற கடலைகளை மாத்திப் போட்டு ஆவி காட்டிக்கிட்டான்.

அடுத்த பஸ் கிளம்பும்போது ரெண்டு சின்னப்பசங்க, "அண்ணே, கடலை"ன்னு கத்தி, ஆளுக்கு ஒத்த நூறு ரூபாய் நீட்டினானுங்க. அவசரமா பொட்டலம் போட்டுக்கிட்டு ஓடிப்போயி கொடுத்துட்டு காச வாங்கிட்டு வந்த வேலாயுதம் மாரியம்மா வர்றதப் பார்த்து சிரித்தான்.

ஆனா, வந்தவ எள்ளும், கொள்ளும் முகத்துல வெடிக்க சிவந்த முகத்தோட வந்தா. கஞ்சி கொண்டு வந்த தூக்குவாளிய டொப்புன்னு வண்டி மேல வச்சா. "பாத்தும்மா, பழையவண்டி ஓட்டையாக்கிறதா"ன்னு வேலாயுதம் சிரிக்க, அவள் இன்னும் முறைத்தாள்.

"ஏய்யா, நம்ம பொழப்புல மண்ணப்போடுறதுக்குன்னே ஒரு கடலை வண்டிக்காரன் புதுசா வந்திருக்கான் போல"

காலையில எட்டுமணியப்போல பக்கத்து பஸ்ஸ்டாண்டுல யாவாரம் பார்த்துக்கிட்டு இருந்தவன், இங்க வண்டியோட நுழைஞ்சதுமே. மத்த மூணு வண்டிக்காரவுகளும் சேர்ந்து வண்டியோட போயி, "யாரப்பா, புதுசாயிருக்க?"ன்னு அரட்ட, பய அழுக ஆரம்பிச்சுட்டான். வரவேண்டியதாப் போச்சு சூழ்நிலைங்கிறான். இதவிட்டா வேற பொழப்பும் தெரியாதுங்கிறான்.

"சரி, பார்க்க பாவமாயிருக்கு. அதோட பஸ்ஸ்டாண்ட என்ன நமக்கு மட்டுமா பட்டாப்போட்டு கொடுத்துருக்கா. அவன் பங்குக்கு அவனும் சுத்தி வந்து யாவாரம் பார்த்துட்டுப் போறானே"ன்னு சுப்பையா மத்த ரெண்டு பேர்கிட்டயும் தனியாப் பேசி, புதுசா வந்தவனையும் எப்படி நடந்துக்கிறணும்னு சொல்லவும் செஞ்சான். இதையெல்லாம் வேலாயுதம் மனசா ஏத்துக்கிட்டாலும், சோணைக்கு மனசில்லை. அவன மனசுக்குள்ளே திட்டுறான்னு அவனோட முறைக்கிற கண்ணே காட்டிக் கொடுத்துச்சு.

வேலாயுதம் காலையில நடந்த இந்த விஷயத்தையெல்லாம் மாரியம்மாகிட்ட அப்படியே சொன்னான்.

"தாராளம் தண்ணிப்பட்ட பாடு, ஏராளம் எண்ண பட்ட பாடாயிருக்குது உங்களுக்கு. உங்க மூணு பேருக்கே யாவாரம் சரியில்லாம, பிள்ளைகுட்டிகளோட கஷ்டப்படும் போது இன்னொருத்தனுக்கு வக்காலத்து வாங்குறீகளோ? குடிக்கிறது கஞ்சி, கொப்புளிக்கிறது பன்னீருங்கிற கதையாவுலய்யா இருக்கு உம் பேச்சு"

மாரியம்மா எப்பவும் இப்படித்தான். பேசினவாய மூடாமத்தான் பேசுவா. ஆனா 'பாசக்காரி, ராத்திரி ஒன்பது மணிக்கு வேலாயுதம் வீட்டுக்குப் போயிரணும் அவளுக்கு. சூடா சோத்தைப் போட்டு கொழம்ப ஊத்தி அவன் சாப்பிடுறத பார்த்துக்கிட்டே தானும் சாப்பிடுவா. "ரெண்டு நேரத்துக்கும் கஞ்சியக்குடிச்சிக்கிட்டு



கெடக்குற, ஒரு நேரமாவது சூடா சாப்பிடு"ன்னு அள்ளி, அள்ளி வச்சு அன்ப அதுல காண்பிப்பா. வென்னி போட்டு குளிக்கச் சொல்லிட்டு, காலப் பிடிச்சும் விடுவா. "பஸ் ஸ்டாண்டை இப்படி நாய் மாதிரி கத்துறதுக்கா உங்காத்தா உன்னைப் பெத்துப் போடணும், உங்காத்தாக்காரி உன்னைப் பெத்த நேரமும், பேருவச்ச நேரமும்"ன்னு வேலாயுதத்துக்கு கால் அமுக்கிக்கிட்டே அவுக அம்மாவையும் வஞ்சுக்குவா.

பாவம், அவளும் வீட்டுல சும்மா இல்லை. தீப்பெட்டி ஒட்டுவா. பூ கட்டுவா. கடலையை அவிச்சு கொடுத்துட்டு பழம், காய்கன்னு வாங்கி காலையிலேயே யாவாரத்துக்கும் போயிட்டு வந்திருவா. அவளும் சேர்ந்து பாடுபடுறதுனாலதான் பிள்ளைகள பள்ளிக்கூடத்துல படிக்க வைக்க முடியுது.

வசவுல பிடிக்க ஆரம்பிச்சவளுக்கு துணைக்கு பக்கவாத்தியம் வாசிக்க வந்தவன் மாதிரி சோணை வந்தான். "நல்லாச் சொல்லு மதினி, அண்ணனும், சுப்பையாப் பயலும் தான் என்னமோ பெரிய டாடாபிர்லா மாதிரி.... யாவாரத்துல பங்குக்கு வந்து நிக்கிறவனை மல்லுக்கட்டி அனுப்பாம பாவம், புண்ணியம்ன்னு பேசிக்கிட்டு திரியுதுக"ன்னு மாரியம்மாளுக்கு எடுத்துவிட்டான். "பாவிப்பய, இவனுக்கு இந்தக் பஸ்ஸ்டாண்டை விட்டா வேற ஊரா கெடைக்கல. பொழப்ப கெடுக்கவே வந்திருக்கா"ன்னு மாரியம்மாளும் சோணைகிட்ட பேச ஆரம்பிச்சா.

வேலாயுதம் வண்டிய வேப்பமரத்தடியில பூக்கடைக்கு பக்கத்துல நிப்பாட்டிவச்சிட்டு கஞ்சிவாளிய எடுத்துக்கிட்டு சாப்பிட உட்கார்ந்தான்.

"இருய்யா, பேசிக்கிட்டே மறந்து தொலைச்சுட்டேன் பாரு. வடை வாங்கியாறேன்"னு ஜாக்கெட்டுக்குள்ள வச்சிருந்த பர்ஸ எடுத்துக்கிட்டு மண்டை முத்தையா கடைக்கு ஓடினா. ஆமவடையும், உளுந்தவடையுமா ரெண்டு வாங்கி வந்தா. "மதினி. மண்டைமுத்தையா ஒத்தரூபா அளவுக்குத்தான் போடுவாரு"ன்னு சோணை சிரிக்க, "அப்புறம் அவரு மண்டையளவுக்கா போடுவாறு"ன்னு வேலாயுதமும் சிரித்துக்கொண்டே கஞ்சிய அள்ளிக்குடித்தான்.

உளுந்தவடைய பாதி பிச்சு பொண்டாட்டி கையில கொடுத்தான் வேலாயுதம். அவளும் மறுக்காம வாங்கி வாயில போட்டுக்கிட்டா. அவளுக்கு உளுந்தவடை பிடிக்கும்ன்னு அவனுக்குத் தெரியும்.

வேலாயுதம் சாப்பிட்டு முடிச்சதும் மாரியம்மா தூக்குவாளிய எடுத்துட்டுப் போயி பஸ்ஸ்டாண்டுக் குள்ளேயே இருந்த சிண்டக்ஸ்தொட்டி பைப்புல கழுவி, அது நெறைய தண்ணியும் பிடிச்சாந்து வந்து புருனுக்கு கை கழுவ கொடுத்தாள். "நீ வேணா, செத்த மரநிழலுல உட்காரு. நான் போயி ஒரு சுத்து சுத்தியாரேன்"னு சொல்லிட்டு வண்டிய நின்னுக்கிட்டிருந்த பஸ்களுக்கு நடுவுல போக ஆரம்பிச்சா மாரியம்மா.

"அப்பாடா"ன்னு வேப்பமரத்தடியில உட்கார்ந்த வேலாயுதத்துக்கு கண்ணுலபட்டது. அந்தப் புதுசா வந்திருந்தவனோட வண்டி. வண்டிக்குள்ள எரியிற ஸ்டவ்வுல இருந்து எப்படியோ தீ சாக்குல பட்டு புகைய ஆரம்பிச்சது. வண்டிக்கிட்ட அந்தப் புதுப்பயலையும் காணோம். அடடே எரியப்போகுதேன்னு மனசு படபடக்க, கையை ஊண்டி வேலாயுதம் எந்திரிக்க, தீ சாக்குல சப்புன்னு பத்திக்கிச்சு.

ஓடி வந்த வேலாயுதம் சாக்குல பத்திக்கிட்ட தீயைக் கையால தட்டியே அணைச்சுப்புட்டான். கடலையை ஓரமா ஒதுக்கிட்டு சாக்குல தண்ணிய ஊத்தினான். எரியிற ஸ்டவ்வையும் குறைச்சு வச்சான். கடைக்குப்போயிட்டு வந்த புதுப்பய தீயைப் பார்த்த அதிர்ச்சியில பதறிப்போயி ஓடிவந்தான். அவன் ஓடிவர்றதுக்குள்ள வேலையுதம் எல்லாத்தையும் சரி பண்ணிட்டான். வந்தவன் வேலாயுதத்துக்கு கண்களாலே நன்றி சொல்லும் முகபாவனையில் நின்றான்.



"ஏண்டா, இப்படியா ஸ்டவ்வ ஏறியவிடுறது? ஏற்கனவே அவிச்ச கடலைதானடா. சூடா இருக்குறதுக்குத்தான் ஸ்டவ் எறியணும். சாக்க இப்படித் தொங்க விடாம, இழுத்து வையி மொதல்ல". வேலாயுதம் தொழில் யுத்திகளைக் கற்றுத்தர, வாத்தியாருக்கு முன் நிக்கிற பள்ளிக்கூட பையன்போல நின்னு கேட்டான் புதியவன்.

மாரியம்மாகிட்ட சோணை, "அங்க பாரு மதினி, உம்புருன் புதுசா வந்தவனுக்குப் புத்திமதி சொல்றத"ன்னு கையைக் காண்பிச்சுவிட வண்டியோட வேகமாக வந்தவள், "எங்க வயித்தெறிச்சதாண்டா இப்படி வண்டி பத்திக்குது"ன்னு அவன் முகத்துக்கு நேரவே வைய ஆரம்பித்தாள்.

"மாரியம்மா, என்ன பேசுற நீ? அவனை எதுக்கு வையிற, நானும் அவனும் ஒண்ணுதான். நம்மளப்போல வயித்துப் பாட்டுக்குத் தானே வந்திருக்கான். அவனுக்கு வந்த நாள்லேயே நஷ்டம்னா தாங்குவானா அவன். பாவம் சின்ன பையன். அவனும் பொழைக்கட்டுமே"

வேலாயுதம் சொல்லிக்கிட்டு வண்டிய தள்ளிக்கிட்டு, "கடலை, கடலை"ன்னு கத்திக்கிட்டே புறப்பட, மாரியம்மா, "போய்யா, பொழைக்கத் தெரியாத பொசகெட்ட மனுசா"ன்னு வஞ்சுக்கிட்டே தூக்குவாளிய எடுத்துக்கிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

நன்றி - நிழல்கள் தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உய்யுமோ?

தமிழைக் காத்த வேந்தரே,
தமிழரையும் காத்தீரா?
தமிழினத்தை அழித்ததார்?
சண்டை என்றும் செய்ததார்?
தமிழ்ப் புலவர் அல்லவோ?
தமிழைக் காத்து வந்தனர்!
தமிழுக்கான 'கொடை' களைத்
தந்ததுண்டு- உண்டுதான்!

முப்பதின் மேற் போர்க்களம்,
முழுதும் மூவினத்துளே!
எப்பொழுதும் அகமுமே,
என்றுமுண்டு புறமுமே!
இப்பொழுது சேரநா
டில்லை, மலையாளமே!
தப்பித்தேய்ந்து போன இத்
தமிழகமும் உய்யுமோ?

தாமரைத்தீவான்.. [ஈச்சந்தீவு, கிண்ணியா]

## சீர்பெறுமா நல்லிணக்கம்

இன மத முறுகல்கள்
இருக்கும் வரை
இயல்பான வாழ்க்கைக்கு
ஏது ஏற்ற நிலை!

சுதந்திர மில்லாத எந்தச்
சுகபோக வாழ்க்கையும்
இதந்தருமா என்றால்
இல்லவே இல்லை!

அல்வாப் பேச்சுக்கள்
அதிரசமான வாக்குறுதிகள்
செல்லாக் காசானால்
சீர்பெறுமா நல்லிணக்கம்?

தேசியப் பிரச்சினைக்கு
சிறந்த பரிந்துரைகள்
பரந்து கிடந்தாலும்
புரிந்து கொள்வார் யாருமில்லை.

ஆட்டமும் பாட்டும் அதிவேக
அபிவிருத்தி ஓட்டமும்
நாட்டு நடப்பு இன்று
நல்லிணக்கம் விரைவில் வருமா இங்கு?

– சேனையூரான் –

## அன்பே உனக்காக என் பிரார்த்தனை

உன் கண்களில் சூரியன் உதிக்கட்டும்
உன் காலடியில் அது மறையட்டும்
பொய்களிலிருந்து உண்மையை எடுக்க
என்றும் உன்னால் இயலட்டும்
தீர்ப்பு வழங்காதிருக்கும் தைரியம்
உனக்குக் கிடைக்கட்டும்
பூரணமற்றவளாய், நிச்சயமற்றவளாய்,
திட்டவட்டமற்றவளாய் நீ திகழ்க
அப்போதுதான் உன் எதிரிகளை நீ மறப்பாய்
அவர்களுக்கெதிராய் வன்மம் கொள்வாய்
உன் கனவுகள் எல்லாம் பலிக்கட்டும்
மகிழ்ச்சி உன் உள்ளங்கையில் வளரட்டும்.

நூல் : மறுபாதி
-ஹாரிஸ் காலிக் [பாகிஸ்தானிய கவிஞர்]-
தமிழில் : எம்.ஏ.நுஃமான்

## பிரிவு

நான் தேடிய போது
என் அருகில் நீ இல்லை
நான் வாடிய போது
என்னை தாலாட்ட நீயில்லை
நான் அழுத போது
என் கண்ணீர் துடைத்திட நீயில்லை

– சன்தீபனி –



ஆனால்
நான் நினைக்கும் பொழுது
என் மனமெங்கும்
நீ தானடா!!!

## முதுமையின் உபாதை

முக்கி எழுந்து முழங்கால்
மடித்த வலி போக்கி

கதிரையின் கை பற்றி
கால் தூக்கி முதலடி
வைத்து மறு காலுமாய்

நிமிர்ந்து நடக்கின்ற
திடத்தோடு மங்கிய
கண்களை விரித்து இடுப்பில்
நலுவும் ஆடைதனை இறுக்கி

தத்தி நடக்க செவ்வரத்தையில்
குந்தியிருந்து கரைந்த
காகமொன்று தலையினை
கொத்தி தள்ளாட வைக்க

முதுமையின் வறுமையினை
நினைத்து திமிராய்
சாயம் பூசிய
கேசத்தை தடவியபடி



- திருமலை சுந்தா -

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

### திருகோணமலை வன்னிபங்களும் அதன் தேசவழமைகளும்

பாகம் 04

கடந்தவர தொடர்ச்சி.. ..

யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண அரசுடன் திருகோணமலை வன்னிமைகள் தொடர்புகளையும், சில காலங்களில் அவர்களின் ஆட்சி மேலாதிக்கத்தையும் ஏற்றிருந்ததையும் விபரிக்கின்றது.

15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த யாழ்ப்பாண மன்னர்கள் திருகோணமலை வன்னிபங்களோடு மணத்தொடர்பும் கொண்டிருந்தனர். கனகசூரிய சிங்கையாரியனும் அவன் மகனும் வட தேசத்திலிருந்து ஈழத்திற்குத் திரும்பிய போது திருகோண மலையில் தங்கி பின்னர் தமது நாட்டைச் சென்றடைந்தனர் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. அதே வேளை ஆரியச்சக்கரவர்த்தி செகராச சேகரனும் பரராசசேகரனும் திருக்கோணேஸ்வரத்திற்குச் சென்று வழங்கிய தானங்கள் பற்றி கோணேசர் கல்வெட்டு ஆதாரப்படுத்கிறது.



கங்குவேலிக் கல்வெட்டு

இந்த நூல்களின் வரிசையில் கொட்டியா புரப்பற்றில் இளஞ்சிங்க வன்னிபத்தின் தலைமையில் வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத கோயில் மண்டபத்தில், தேசத்தவர் கூடியிருந்த மகாநாட்டிலே தம்பலகாமத்து வீரக்கோன் முதலியார் பாடிய சித்திரவேலாயுத காதல் என்ற நூல் இடம்பெறுகிறது.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இந்நூல் கொட்டியாபுரப்பற்றை நிர்வாகஞ்செய்வதற்கு நியமிக்கப்பட்ட வன்னிமையும், வெருகலம் பதியை பரிபாலனஞ் செய்யும் கங்காணம், அடப்பனார் முதலாய தலைமைக் காரரும் ,தேச மக்களும், கல்வி கேள்விகளில் சிறந்த பண்டிதர்களும் ஆலயத்தில் உள்ள அழகிய மண்டபத்தில் மாகாநாடு கூடினர் என்ற சமகால விபரங்களை சிறப்பாக எடுத்துரைக்கிறது. எனவே கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை, வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத காதல் ஆகிய நூல்கள் திருகோணமலை வன்னிபங்களின் வரலாற்றினை ஆதாரப்படுத்தும் ஆவணங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பண்டைய நூல்களைப்போலவே திருகோணமலைப் பிரதேச வன்னிமைகள் பற்றிக் கூறும் முக்கிய ஆவணங்களான இரு கல்வெட்டுக்கள் கொட்டியாபுரப்பற்றில் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதில் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலிலுள்ள சாசனம் 'ஸ்ரீ சுப்ரமண்ய நம தெற்கு மதில் கயில வன்னியனார் உபயம்'எனக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சித்திரவேலாயுத சுவாமி கோயில் திருப்பணிகள் இடம் பெற்ற பொழுது தெற்கு மதில் சுவரை கயிலாய வன்னியனார் என்பவர் கட்டினார் என்பதனை உறுதிப்படுத்துகிறது.

இரண்டாவது கல்வெட்டு கங்குவேலிக் கல்வெட்டு என்றழைக்கப்படுகிறது. இது திருகோணமலை கொட்டியாரப்பற்றில் கங்குவேலி சிவன் கோயிலில் உள்ள மூன்றடி உயரமான ஒரு தூணில் பொறிக்கப்பட்டள்ளது. இதில் 'மலையில் வன்னியனாரும், ஏழுர் அடப்பர்களும் கூடி தம்பிரானார் கோணைநாதனுக்கு' என்று தொடர்கின்ற தான சாசனம் இருக்கிறது. 14ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டு மலையில் வன்னியனார் என்று குறிப்பிடுவது திருகோணமலை வன்னிபத்தையாகும். இவர் அவ்வூரிலுள்ள வெளியொன்றை புல்நடப்பமாக கோணநாதர் கோயிலுக்கு கொடுத்தார் என்பதின் மூலம் அவர் சுதந்திரமாக அப்பிராந்தியத்தில் ஆட்சி புரிந்தார் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

மேற்கூறிய பண்டைய நூல்கள், கல்வெட்டுக்கள் என்பனவற்றிற்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது ஐரோப்பிய நிர்வாகிகளின் ஆவணங்களாகும். அவற்றில் ஒன்று கி.பி.1551 இல் திருகோணமலையில் ஆட்சி செய்த வன்னிபம் இறந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வாரிசு உரிமை தொடர்பான ஒரு தகவலைப் பதிவு செய்திருக்கிறது.



திருகோணமலை வன்னிபத்தின் வாரிசு வயதில் இளையவனாக இருந்ததினால் திருகோணமலை வன்னிபத்தின் உறவினர்களில் ஒருவன் வன்னிபமாக பதவியேற்க முயற்சி செய்தான் என்பதையும். இதனை யாழ்ப்பாண சங்கிலி மன்னன் தலையிட்டு நிறுத்து வதற்கு முயன்ற போது அவன் போர்த்துகீசப் படைகளின் உதவியை எதிர்பார்த்து கத்தோலிக்க மதத்திற்கு மாறினான் என்பதையும் அது ஆதாரப்படுத்துகிறது. எனினும் இம் முயற்சி சங்கிலி மன்னனால் தடுத்து நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நிர்வாகிகளின் ஆவணங்களில் முக்கியத்துவம் பெறுவது அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஆவணச் சுவடிகளாகும். 1815 ஆம் ஆண்டு பிரதமநீதியரசர் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஒல்லாந்து அரசாங்கம் தமிழர் வாழும் பகுதிகளுக்கென தொகுத்து சட்டமாக்கிய தேசவழமைகளின் பிரதிகளை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி இருந்தார். அவற்றின் பிரதிகள் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஆவணச் சுவடிகள் என்ற தொகுப்பாக வெளிவந்தன. திருகோணமலைப்பற்று வன்னிமைகள் பற்றியும், அங்கிருந்த தேசவழமை பற்றியும் அறிய உதவும் வரலாற்றாதாரங்களாக இவ்வாவணம் விளங்குகின்றது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு வன்னிமைகளும் இவ்வாவண உருவாக்கத்தில் பங்குகொண்டுள்ளது.

தொடரும் ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களத்தில் குதிக்கும் விஜய்



பல இளம் நடிகர்கள் முன்னிலையில் சூப்பர்ஸ்டார் பட்டம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணி விஜய்யை வைத்து பல படங்கள் தந்த செல்வாபாரதி மூலம் நடிகர் நடிகைகளை மதுரைக்கு அழைத்து வரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் விஜய். ஆனால் சில நடிகர்கள் அப்படி இப்படி சொல்ல, களத்தில் விஜய்யே இறங்கினாராம்.தன் செல்போனில் இருந்தே அவர்களுக்கு போன் போட்டு பேசுகிறாராம். மதுரைக்கு அவசியம் வரணும் ப்ரோ..! என்று அன்புடன் அழைப்பு விடுக்கிறாராம். விஜய்யின் போன் அழைப்பைக் கேட்டு வளரும் நடிகர்கள் பதிலுக்கு கண்டிப்பா ப்ரோ என்று உறுதி செய்து செய்தனராம்.



## மணி விழாவில் முத்து

கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் மணி விழாவானது தமிழ்நாட்டில் உள்ள கோவையின் கொடிசியா அரங்கில் நடைபெற்றது. இக்கலை இலக்கியத் திருவிழாவில் முதன்மை விருந்தினராக முன்னாள் இந்தியக்குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் கலந்து கொண்டார். உலகதமிழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த இவ்விழாவில் சுவிட்சர்லாந்து சார்பாக கல்லாறு சதீஸ் கலந்துகொண்டார். இவர்களுடன் தமிழ்சினிமாவின் மூத்த இயக்குனர்களும் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## யார் கடித்த காயம்? ஸ்ருதி!



சமீபத்தில் சென்னையில் நடந்த பிலிம்பேர் விழாவில் நடிகை ஸ்ருதிஹாசன் கலந்துகொண்டு நடனமும் ஆடினார். அப்போது அவரை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துக் கொண்டிருந்த போட்டோகிராபர்கள் அவரது இடது கையில் காயம் இருந்ததை கவனித்து, அவரது கை தெரியும்படியான புகைப்படங்களை அதிகமாக எடுத்துள்ளனர்.

ஸ்ருதிஹாசனின் காயம் யாரோ ஒருவர் கடித்தது போல் உள்ளதாகவும், ஆண் நண்பர் ஒருவரால் ஏற்பட்ட காதல் பிரச்சனையால் ஏற்பட்ட காயமாக இருக்கலாம் என ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. ஆனால் ஸ்ருதிஹாசன் தரப்பில் இருந்து, டான்ஸ் பிராக்டீஸ் செய்யும்போது கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம்தான் இது என்றும், இதுகுறித்து யாரும் கற்பனையான செய்தி பரப்பவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஏன் யுவன் நானே பாடுறன்!

அஞ்சானில் "ஏக் தோ தீன் சார்..." என்ற பாடலை முதலில் படத்தின் இசையமைப்பாளரான யுவன்ஷங்கர் ராஜாவே பாடியிருக்கிறார். அந்த பாடலை வைத்து படத்தின் படப்பிடிப்பையும் முடித்திருக்கிறார்கள். ஆனால், அவர் பாடியதை விட வேறு யாராவது பாடினால் வித்தியாசமாக இருக்குமே என்று படத்தின் நாயகனான சூர்யா சொன்னாராம். சூர்யா ஒரு விளம்பரப் படத்தில் பாடியது இயக்குனர் லிங்குசாமிக்கு ஞாபகம் வந்ததாம். அதன் பின் சூர்யாவிடம் அதைச் சொல்லி இசையமைப்பாளர் யுவன்ஷங்கர் ராஜா சம்மதத்துடன் சூர்யாவைப் பாட வைத்திருக்கிறார்கள்.



## ஒட்டகம் பரிசளித்த 'புறம்போக்கு'



"புறம்போக்கு" படத்தின் படப்பிடிப்பு தற்போது ராஜஸ்தானில் நடைபெற்று வருகிறது. படத்தின் கதைப்படி கார்த்திகா ஒட்டகத்தில் மீது சவாரி செய்வது போன்று காட்சி இருப்பதால் கார்த்திகாவுக்கு இரண்டு ஒட்டகம் சவாரி செய்பவர்கள் பயிற்சி கொடுத்தனர். ஒட்டகத்தின் காட்சிகள் படமாக்கி முடிந்தும், அந்த ஒட்டகத்தை விட்டு பிரிய மனமில்லாத கார்த்திகா, அந்த ஒட்டகத்தை வளர்ப்பு பிராணியாக தனதாக்கி கொண்டார். ஆனால் அந்த ஒட்டகத்திற்கு பணம் கொடுத்தது தயாரிப்பாளர்

## தொட்டாச்சிணுங்கி சமந்தா

ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் வென்ற குத்து சண்டை வீராங்கனை மேரி கோமின் வாழ்க்கையை சித்தரிக்கும் படத்தில் பிரியங்கா சோப்ரா நடித்து வருகிறார். சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளிவந்து அனைவரின் பாராட்டையும் பெற்றது. விமான நிலையத்தில் காத்துக்கொண்டிருந்த சமயத்தில் "மேரி கோம்" டிரெய்லரை பார்த்த சமந்தா, அனைவரின் முன்னிலையில் அழுது விட்டாராம்.





## நயனுடனா! மாட்டேன்..

இது நம்ம ஆளு படத்தில் நயன்தாராவுடன் ஒரு காட்சியில் கூட நடிக்க மாட்டேன் என்று டாப்சி கண்டிஷன் போட்டுள்ளார். தெலுங்கில் நயன்தாரா, உச்சக்கட்டத்தில் இருந்தபோது நயனின் சில படங்கள் டாப்சியின் கைக்கு சென்றது. அந்த நேரத்தில் செய்தியாளர்கள் இதுகுறித்து நயனிடம் கேட்டபோது, டாப்சியா யார் அது? என்று பதில் கேள்வி கேட்டு தன்னை அவமதித்ததாகவும், அதனால்தான் நயன்தாராவுடன் அவர் நடிக்க மாட்டேன் என்ற கண்டிஷன் போடுவதாகவும் பின்னர் பாண்டிராஜுக்கு தெரியவந்தது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **அனிருத்தால் வில்லனாகிய ஹீரோ**

  வேலை இல்லா பட்டதாரியில் வில்லனாக அறிமுகமாகியிருக்கிறார் அமிதாஷ். ஹீரோவாக நடிக்கும் கனவில் இருந்த அமிதாஷை வில்லனாக மாற்றியவர் அனிருத்.

- **தலவுடன் நடிக்கும் லேடி அஜித்**

  கௌதம் மேனன் இயக்கத்தில் தல அஜித் நடித்துகொண்டிருக்கும் படம் கிட்டத்தட்ட 75 சதவீதம் முடிந்துவிட்டது. இப்படத்தில் தல இரண்டு வேடங்களில் நடிக்கிறார், மேலும் ஒரு அஜித் நடிகை நடிப்பதாக தகவல்கள் வந்துள்ளன.

- **தெலுங்கை தவிர்த்து வரும் ஸ்ருதி**

  தமிழில் பெரிய ஹீரோக்களுடன் படங்களில் நடிக்க ஒப்பந்தமானதும் அவர் தெலுங்குத் திரையுலகை கண்டு கொள்ளவில்லை.

- **கல்யாண கடுப்பில் ஜெய்**

  இருபத்தொன்பது வயதாகும் ஜெய்யிடம், கல்யாணம் எப்போ? என்று கேட்டால் "முதல்ல ஆர்யா, வி'ாலை பண்ண சொல்லுங்க. அதற்கு பிறகு என்கிட்ட கேளுங்க" என்கிறாராம்.

- **அஞ்சானுக்கு பயந்த ஹாலிவுட் படம்**

  அஞ்சான் ரிலீஸ் ஆகும் அன்றே தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தியில் ரிலீஸ் ஆவதாக அறிவிக்கப்பட்ட "எக்ஸ்பேண்டபுள்ஸ் 3" படம் தற்போது இந்தியாவில் மட்டும் ஒரு வாரம் தள்ளி ரீலீசாகும் என தெரிகிறது.

- **மீண்டும் கமலுடன் ஸ்ரீதேவி**

  த்ரிஷ்யம் படத்தின் தமிழ் ரீமேக்கில் பெண் போலீஸ் அதிகாரியின் வேடத்தில் நடிக்க கமல்ஹாசன் ஸ்ரீதேவியை பரிந்துரை செய்துள்ளார்.

- **காதலன் நடிப்பு இலியானா இளிப்பு**

  ஒரு காட்சியில் நடிக்க புதுமுக நடிகர் தேவைப்பட்ட போது அதில் ஆண்ட்ருவை நடிக்க வைக்க முடிவு செய்த இலியானா, திடீர் நடிகர் ஆன காதலனின் நடிப்பை கண்டு சிரித்தபடி இருந்தார்.

- **கிசுகிசு எழுதும் வித்யா பாலன்**

  கிசுகிசு எழுத தனியாக இணைய தள பக்கம் தொடங்கினார் வித்யா பாலன்.

திரை விமர்சனம்

## வேலையில்லா பட்டதாரி

திருமணத்திற்கு பின்னர் ரிலிஸாகும் அமலாபாலின் முதல் ட இருந்த வேல்ராஜ், இயக்குனராகியுள்ள முதல் படம் என பட்டதாரி".

இன்ஜினியரிங் படித்து முடித்துவிட்டு வேலையில்லாமல் வீட்ட



தந்தை சமுத் கொட்டும் தா வாங்கி புதுக்கார் வாங்கி வெறுப்பேற்றும் தம்பி, இவர்களுக்கு இடையே சிக்கி தவிக்கும் கேரக்டர்தான் தனுஷ். இதற்கிடையே பக்கத்து வீட்டில் இருக்கும் அமலாபாலிடம் முதலில் மோதல் அதன்பின்னர் காதல் என முதல்பாதி கொஞ்சம்கூட போரடிக்காமல் படுஜாலியாக செல்கிறது. இடையிடையே அனிருத்தின் அசத்தலான பாடல்கள் வேறு.

ஆனால் இரண்டாம் பாதியில் படத்தின் கதை அதற்கு நேர்மாறக சீரியஸாக போகிறது. தனுஷ் அம்மா சரண்யா இறந்தவுடன், அதனால் கிடைக்கும் வேலை, அந்த வேலைக்கு வேட்டு வைக்க முயற்சிக்கும் வில்லன், அதை தனது படைகளுடன் திட்டம் போட்டு முறியடிக்கும் சீரியஸ் தனுஷ் என சீரியஸாக போகும் கதையில் இடையில் சிரிக்க வைக்க முயல்கிறார் விவேக்.

வேலை வெட்டி இல்லாத ஜாலியான இளைஞன் கேரக்டரில் நடிக்க தனுஷுக்கு சொல்லித்தர தேவையே இல்லை. மிகவும் இயல்பான நடிப்பு. அசால்ட்டான டயலாக் டெலிவரி, அதிரடி பஞ்ச் வசனம், அப்பா திட்டும்போது காதில் போட்டுக்கொள்ளாமல் இருக்கும் காட்சிகள் என தனுஷ் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

அமலாபாலின் அழகை இவ்வளவு டீசண்டாக யாரும் காட்டியதாக நினைவில்லை. படம் முழுவதும் டீசண்டான அதேநேரத்தில் கொள்ளை அழகுடன் காட்சி தருகிறார் அமலாபால். [illegible] காதலாக மாறும் உணர்வை முகத்தில் மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார். கோலிவுட் இயக்குனர்கள் இதுவரை யாரும் இவ்வளவு அழகாக அமலாபாலை ஏன் பயன்படுத்தவில்லை என்பதுதான் சோகம்.



சமுத்திரக்கனி அப்பாவாக நடித்தாரா? அல்லது அவர்தான் உண்மையிலேயே தனுஷுக்கு அப்பாவா என்ற சந்தேகம் படம் பார்ப்பவர்களுக்கு கண்டிப்பாக வரும். அப்படி ஒரு இயல்பான நடிப்பு. இரண்டாவது பாதியில் விவேக் இல்லையென்றால் பாதி பேர் தியேட்டரை விட்டு எழுந்து சென்றிருப்பார்கள். முதல் பாதியில் ஜாலியான திரைக்கதை அமைத்த வேல்ராஜுக்கு இரண்டாவது பாதியில் எப்படி கதை சொல்வது என்பது குழம்பியிருப்பது காட்சிகளை பார்த்தாலே தெரிகிறது. வில்லனுக்கு எதிராக தனுஷ் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் சிறு குழந்தைகூட ஊகித்துவிடும். அவ்வளவு மொக்கையான திரைக்கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஸ்மார்ட் கைப்பேசிகளை அன்லாக் செய்ய



லாக் நிலையிலுள்ள ஸ்மார்ட் கைப்பேசியினை அன்லாக் செய்வதற்கு டிஜிட்டல் டட்டூ (Digital Tattoo) தொழில்நுட்பத்தினை Motorola நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இத்தொழில்நுட்பத்தினை தனது புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியான Moto X இல் இணைத்து அறிமுகப்படுத்துகின்றது. எனினும் இந்த டட்டூவினை கூகுளின் அட்வான்ஸ் டெக்னோலொஜி பிரிவுடனும், அதன் ப்ரொஜெக்ட் குழுவுடனும் இணைந்து Vivalink எனும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதேவேளை ஒவ்வொரு டிஜிட்டல் டட்டூக்களையும் 5 நாட்கள் நீரில் நனைய விடலாம். ஆனால் அதற்குமேல் நீரில் நனைந்தால் அவை பழுதடைந்து விடும்.

## LG - I Pad

LG நிறுவனமானது G Pad எனும் 10.1 அங்குல அளவுடைய தனது புதிய டேப்லட்டினை அறிமுகம் செய்கின்றது. 249.99 டொலர்கள் பெறுமதியான இந்த டேப்லட்டில் 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad-Core Snapdragon 400 SoC Processor, பிரதான நினைவகமாக 1GB RAM என்பவனவற்றுடன் 16GB சேமிப்பு நினைவகமும் காணப்படுகின்றது. மேலும் Android 4.4.2 KitKat இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்த டேப்லட்டில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 1.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, 8,000 mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.



## நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திரை

LG நிறுவனம் இந்த மாத ஆரம்பத்தில் மீள்தன்மை கொண்டதும், ஒளி ஊடுபுக விடக்கூடியதுமான தொழில்நுட்பத்தினைக் கொண்ட தனது புதிய திரை தொடர்பில் தகவல் வெளியிட்டிருந்தது. இந்நிலையில் குறித்த 18 அங்குல OLED திரை இப்போது தயாராகிவிட்டது. தொலைக்காட்சியாக செயற்படக்கூடிய இத்திரை எவ்வாறு தொழில்படுகின்றது என்பது தொடர்பான வீடியோ விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதேவேளை இத்திரையினை 3 சென்ரிமீற்றர்கள் விட்டம் கொண்டதாக சுருட்டி எடுத்துச்செல்ல முடியும் என்பது விசேட அம்சமாகும்.


## பேஸ்புக் அப்பிளிக்கேஷனில் புத்தம் புதிய வசதி




தற்போது iOS, Android சாதனங்களில் பயன்படுத்தப்படும் இந்த அப்பிளிக்கேஷன்களில் Facebook Save எனும் வசதி தரப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி திரைப்படங்கள், நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் இடங்களுக்கான பேஸ்புக் பக்கங்கள், அவற்றின் செய்திகளுக்கான இணையத்தள இணைப்புக்கள் (News Feed Links) என்பவற்றினை ஒரே இடத்தில் சேமித்து வைத்திருக்க முடியும். இந்த சேமிப்பு பொத்தான் அப்பிளிக்கேஷன்களின் கீழ் பகுதியில் வலது பக்க மூலையில் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## விண்டோஸ் 9



மைக்ரோசொப்ட் நிறுவனம் விண்டோஸ் 8 இயங்குதளத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி விண்டோஸ் 9 இயங்குதளத்தினை வடிவமைத்து வருகின்றது. அடுத்த வருடம் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த இயங்குதளத்தின் பயனர் இடைமுகத்தினை எடுத்துக்காட்டும் இரு புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. இவற்றில் Start பொத்தான் மீண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதேவேளை அப்பிளிக்கேஷன்களை தேர்ந்தெடுப்பதற்கு தனியான விண்டோ தரப்பட்டுள்ளது. இதனால் குறித்த விண்டோ அவசியம் இல்லை எனின் அதனை மூடிவிடும் (Close) வசதியும் தரப்பட்டுள்ளது.



## சந்திரனில் மற்றொரு குழி

பூமியின் துணைக்கிரகமான சந்திரனில் பாரிய குழி ஒன்றினை கண்டுபிடித்துள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். 100 மீற்றர் விட்டம் கொண்ட இந்த குழியினை நாசா விண்வெளி மையத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட Lunar Reconnaissance Orbiter (LRO) என்ற விண்வெளி ஓடமே கண்டுபிடித்துள்ளது. இந்த விண்வெளி ஓடமானது 2009ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை 5 மீற்றர்கள் தொடக்கம், 900 மீற்றர்கள் வரை விட்டம் கொண்ட 200 ஆழமான குழிகளை கண்டுபிடித்துள்ளது.

## விண்ணில் - முதல் விமானம்



ஐரோப்பியன் விண்வெளி நிறுவனமானது (European Space Agency - ESA) வளிமண்டல ஆராய்ச்சிக்காக தனது முதல் விமானத்தை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது. IXV (Intermediate eXperimental Vehicle) என பெயரிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள இவ் விண்வெளி விமானம் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் விண்வெளிக்கு செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 300 வகையான சென்சார்கள், Infrared கமெரா என்பவற்றினை உள்ளடக்கியுள்ள இவ்விமானம் அமெரிக்க விண்வெளி நிலையமான நாஸாவினால் பயன்படுத்தப்படும் விண்வெளி ஓடத்தின் கட்டுமாணப்பணிகளுக்கு நிகரானது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆல்கஹால் பிடிக்கும் கைப்பட்டி



பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் போது மது அருந்த விருப்பம் இல்லாதவர்களையும் அவர்களை அறியாமலே வேறு பானங்களில் கலந்து கொடுத்து விடுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அல்கஹோலை இனம்கண்டு கொள்வதற்கு Vive எனும் இலத்திரனியல் கைப்பட்டி உதவியாக இருக்கின்றது. இச்சாதனம் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் Bluetooth, WiFi, GPS தொழில்நுட்பங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளதுடன், Bluetooth உதவியுடன் ஸ்மார்ட் கைப்பேசிகளுடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஒரு கொலையின் கதை

கொலையின் கதை பாகம் 3 எதிர்வரும் வாரம் முதல் ஆரம்பமாகும்

# இசுரேலினைப் புரிந்து கொள்ளுதல்

இசுரேலின் அரசியலை ஆட்டிபடைப்பது அதன் மத அடிப்படைவாத கருத்தியல் 'சியோனிச'த்திற்கு முக்கிய பங்குண்டு. 'சியோனிசம்' எனும் யூத மத அடிப்படைவாத செயல்பாட்டினை புரிந்து கொள்வதே பாலஸ்தீன விடுதலையை உணர முடியும். பல முக்கியமான யூத பெருமக்கள் பாலஸ்தீனத்தினை ஆதரித்தவர்கள், ஆதரிக்கிறவர்கள். இசுரேலில் இருக்கும் யூத முற்போக்கு ஆற்றல்களும், மத அடிப்படைவாத எதிர்ப்பியங்களும் 'சியோனிச' விரிவாதிக்க செயல்பாட்டினை எதிர்க்கிறார்கள். அவர்களும் பாலஸ்தீனத்தினை ஆதரிக்கிறார்கள். இந்த இன-மதவெறியின் அடிப்படையிலேயே இசுரேலின் ராணுவமும் செயல்படுகிறது.

சிங்கள பேரினவாதத்திற்கும், சராசரி சிங்கள மக்களுக்கும் உள்ள இடைவெளியை புரிந்துகொள்வதைப் போலவே இசுரேலின் 'சியோனிச யூதவெறியை' அறிந்து கொள்வதும்.
போராளிகளோ, விடுதலை ஆதரவு ஆற்றல்களோ சராசரி சிங்கள மக்களை விரோதிகளாக பார்த்ததில்லை. சிங்கள பேரினவாதமே தமிழர்களுக்கு விரோதமானது.

அரசின் பேரினவாத வெறிக்கு அனைத்து சிங்கள மக்களும் பொறுப்பாளிகள் அல்ல.. அதே போல சிங்கள மக்கள் அனைவரும் சிங்கள பேரினவாதத்தினை ஆதரிப்பவர்கள் என்று எடுத்துகொள்ள முடியாது. (சிங்கள பேரினவாத இராணுவமும் இசுரேலினால் பயிற்றுவிக்கப்பட்டது).

இசுலாமிய அடிப்படைவாதம் பேசும் அரபு நாடுகள் பாலஸ்தீன மக்களின் அடிமைத்தனத்தினை போக்கவேண்டுமென்று முடிவெடுத்து செயல்பட்டால் அதை சாத்தியப்படுத்த முடியும்.

ஆனால் அந்த அரசுகளும் மறைமுகமாகவும், நேரடியாகவும் மேற்குலகிற்கு அடிமையாகவே இருக்கின்றன. இந்த அரசுகள் எதிர்த்து பேசவில்லை என்பதற்காக சராசரி அரபு மக்கள் பாலஸ்தீனத்தின் மீதான படுகொலையை ஆதரிக்கிறார்கள் என அர்த்தம் அல்ல. ஏனெனில் ஈழப்படுகொலையை இந்தியா ஆதரித்தது என்பதற்காக தமிழக தமிழர்கள் அந்தப் படுகொலையில் உடன்பட்டவர்கள் என்றாகிவிட முடியாது.

நாம் ஒன்றினை கவனத்தில் வைக்கவேண்டும்.

இசுலாமிய அடிப்படைவாதம் , பயங்கரவாதம் பேசும் அல்கொய்தா போன்ற குழுக்கள் பெரும்பான்மை இசுலாமியர் வாழும் பாலஸ்தீனத்திற்காக ஒரு அசைவும் செய்ய மாட்டார்கள்.

இந்துத்துவ அடிப்படைவாதம் பேசும் இந்தியா ஒருபொழுதும் பெரும்பான்மை இந்துக்கள் (என்று இந்தியா வரையறுக்கும்) எனப்படும் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படும் பொழுது அதை தடுக்க ஏதும் செய்ய மாட்டார்கள், மாறாக உதவியே செய்வார்கள்.

கிருஸ்துவ அடிப்படைவாதத்தினை உள்ளடக்கி வைத்திருக்கும் மேற்குலக நாடுகள் கிழக்கு ஐரோப்பாவில் கிருத்துவர்களுக்குள்ளும் இனப்படுகொலைகளை தூண்டியது, அதை தடுக்கிறேன் என்று அப்பகுதிகளை தாக்கி அழித்தது.

கிருத்துவத்தினை பின்பற்றும் சில ஆப்பிரிக்க நாடுகள், தென்னமெரிக்க நாடுகள் பலவற்றினை அமெரிக்கா தனது பிராந்திய நலனுக்காக அழித்தது. ஏன். அது கிருத்துவ குருமார்களைக்கூட கொலை செய்யவும் செய்தது.

இனப்பேரினவாதத்தினை, மதவெறியை, சாதியவெறியை அரசுகள் பயன்படுத்திக்கொள்ளும். ஏனெனில் அதிகாரத்தினை கைப்பற்றவும், காப்பாற்றவும் இவர்களுக்கு இந்த முரண்கள் தேவை. இந்த வெறிக்கு பலியாகும் பொதுமக்கள் சக மக்களை கொல்கிறார்கள், கொலை செய்ய துணை செய்கிறார்கள், போரினை நடத்த ஆதரிக்கிறார்கள், போரில் பங்கேற்கிறார்கள்.

இந்த முரண்களை வைத்து தான் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும், இந்தியாவும் தனது பிராந்திய நலனை நிறைவேற்றிக்கொள்ளும்.

திருமுருகன்காந்தி.
மே பதினேழு இயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் -10

## சத்தியம் காத்தலும் இரகசியம் பேணலும்



(வி.என்.சந்திரகாந்தி)

'அப்பாடா...... அதெவற்றையும் எம்மால் கடைப்பிடிக்க முடியாதப்பா....' என்று நீங்கள் கட்டாயமாக தலையில் கையை வைப்பீர்கள்!

ஆனால் சத்தியத்திற்காக பல கஷ்டங்களையும் சோதனைகளையும் எதிர் கொண்டு இறுதிவரை வாழ்ந்த நாயகர்கள் இருவர் பற்றி எமது பெற்றோர் எமக்கு அறிவூட்டியிருக்கிறார்கள். ஒருவர் சத்தியவான் என பெருமையுடன் அழைக்கப்பட்ட அரிச்சந்திர மகாராஜா. அடுத்தவர் எமது பெற்றோரின் காலத்திலேயே அவர்கள் கண்முன்பாக வாழ்ந்து 1948ல் இறைவனடி சேர்ந்த 'மஹாத்மா' என கொண்டாடப்பட்ட மோகனதாஸ் கரம் சந்திரகாந்தி ஆவார்.

'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தையும் 'சத்திய சோதனை' சுயசரிதை நூலையும் எமது பிள்ளைகள் கட்டாயம் பார்க்கவும் வாசிக்கவும் வேண்டும்.

சத்தியம் என்றால் என்ன?

சத்தியம் என்றால் குற்றமற்ற உண்மை அல்லது வாய்மை என கொள்ளல் வேண்டும். 'பொய்மையும் வாய்மை இட்த்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என வள்ளுவரும் கூறியுள்ளார். எனவே வாய்மை, சத்தியம் இரு சொற்களும் ஒரு பொருட் கிழவி என கருத வேண்டும். சத்தியம் பேசுவதை அறமாக கொண்ட மகான்களை பின் பற்றி நாமும் சத்தியம் பேச வேண்டும். அதுவே அறம்! மக்கள் ஏன் பொய் பேசுகின்றார்கள் என்பதை புரிந்து கொண்டால் நாம் அத்தவறுகளிலிருந்து விலகி நடக்க முடியும்.

பலர் தமது குற்றத்தை மற்றவர்கள் அறியார் என்றும் தனது பலம் குற்றங்களை மறைக்கும் என்றும் தம்மை துறந்தார் போல் காட்டியும் நடத்தலால் பல சந்தர்ப்பங்களில் பொய் பேச நேரிடுகின்றது. அதேபோல் பிறர் பொருளை வஞ்சனையால் கவர்பவர்களும் பொய் பேசுகின்றனர். எனவே வஞ்ச மனம் கொண்டு நடப்பதை முதலில் நாம் தவிர்க்க வேண்டும். அதுவே சத்தியம் காத்தலில் பிரவேசிக்க தீர்மானித்திருக்கும் எமக்கான முற்று முழுதான பயிற்சி!

அடுத்து இரகசியம் காத்தல் பற்றி ஆராய்வோம். இரகசியம் என்பது மூன்று நிலைகளில் அவதானிக்கற்பாலது. ஒன்று, தனிநபர் சார்ந்தது. இரண்டாவது இருவர் சார்ந்தது. மூன்றாவது இரண்டுக்கு மேற்பட்டோர் சார்ந்தது.

தனி நபர் சார்ந்த இரகசியம் காத்தல் இலகுவானது. ஒருவர் தான் சார்ந்த எந்த உண்மைகளையும் மற்றவர்களுக்கு மறைப்பதில் கஷ்டம் இல்லை. அந்த இரகசியம் நன்கு பேணப்படும். அதற்கு உறுதுணையாக கனடா போன்ற நாடுகளில் ஒருவரது மருத்துவ அறிக்கையை அவரது தாய் கூட மருத்துவமனையிலிருந்து பெற முடியாது! அடுத்து இருவர் சார்ந்த இரகசியம் பேணல் நிலை. இதுவும் ஓரளவு பாதுகாப்பானதே. பெற்றோர்-பிள்ளை, கணவன்-மனைவி, நண்பர்கள் இருவர் என்ற பாசப் பிணைப்புகளுக்கிடையே இரகசியத்தை காத்தல். அங்கு பாசம், காதல், நட்பு காரணமாக இரகசியத்துக்கு குந்தகம் நேராமல் தடுக்கப்படுகின்றது.

ஒரு பெண்ணானவள் தனது மானம், மரியாதை, கௌரவம், அனைத்தையும் தனது கணவனுக்கு அர்ப்பணிக்கிறாள். அதற்கு காரணம் கணவன் - மனைவி தம் இருவருக்கும் இடையே உள்ள இரகசியம் காக்கப்படும் என்கின்ற அவளது நம்பிக்கையே அல்லவா!

அடுத்து இருவருக்கு மேற்பட்டோர் சார்ந்த இரகசியம் பேணல் நிலை. மிகவும் ஆபத்தான நிலை! பல சாம்ராஜ்யங்கள் சாய்ந்து விட்டன. இன்னமும் சாயக் காத்திருக்கின்றன! தமது மனைவியரான இளவரசிகள் மெய்ப்பாதுகாவலருடன் சோரம் போய்விடக்கூடிய சந்தர்ப்பத்தில் இரகசியங்கள் கசிந்து விடும் என பயந்து திருநங்கைகளை மெய் பாதுகாவலராக வைத்திருந்த மன்னர்கள் பற்றி அறிந்திருக்கின்றோம்.

இருவருக்கிடையே உள்ளதே இரகசியம், இருவருக்கு மேற்பட்டுவிட்டால் அது பரகசியம்!

இந்நிலை பற்றியே நாம் விழிப்பாக இருக்க வேண்டும்! எமது எதிரிகள் எம்மை பழிவாங்க வாய்த்த நிலை இதுவேயாகும். 'அவர் சொன்னார்.... இவர் சொன்னார்' என்று எம்மைப் பற்றிய இரகசியங்களையெல்லாம் கசியவிட அவர்களுக்கு வேறு என்ன சந்தர்ப்பம் வேண்டும்?

இப்போ மீண்டும் சத்தியம் பற்றி சிந்தித்து பாருங்கள். சத்தியம் பேசும் எவனாவது மற்றவர்களுக்கு தீங்கை உண்டு பண்ணக்கூடிய வகையில் அவர்கள் பற்றிய இரகசியங்களை கசிய விடுவானா? இல்லவே இல்லை!

எனது நண்பரான மூத்த எழுத்தாளர் ஒருவர் 2006ல் வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தின் சாஹித்திய விழா குழுவில் அங்கத்தவராக இருந்த 'அனாஸ்' என்கின்ற மற்றொரு எழுத்தாளர் அவரிடம் ஒரு படிவத்தை கொடுத்து அதை பூர்த்தி செய்து கிராம சேவை உத்தியோகத்தரின் கையொப்பத்தைப் பெற்று பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு இவ்வாண்டுக்கான பிரதேச செயலர் விருது வழங்கப்படும் என்று உறுதி கூறினார். அந்த மூத்த எழுத்தாளரும் அப்படியே செய்தார். ஆனால் அவர் அங்கு தவறொன்றினை இழைத்தார். இந்த விபரத்தை மற்றொரு எழுத்தாளரும் சாஹித்திய விழா குழுவில் அங்கத்தவராகவும் இருந்த தனது நண்பருக்கு கசிய விட்டார். தெரிவுக்குழுவில் இருப்பவர்களுக்கு விருது வழங்கப்படக்கூடாது என்பது நியதி. இருப்பினும் அவருக்கு விருது வழங்கப்பட்டது! தெரிவுக்குழுவிலிருந்து அவரை இராஜினாமா செய்யவைத்ததன் மூலம் அது சாத்தியமானது!

மூத்த எழுத்தாளரான எனது நண்பருக்கு விருது கிடைக்கவில்லை. ஆனால் அவருக்கு 2008ல் எழுத்தாளர் கௌரவிப்பு விருதும், 2010ல் கலாபூசணம் விருதும், 2011ல் முதலமைச்சர் விருதும் கடந்த 28.06.2014ல் நகர முதல்வர் விருதும் கிடைத்தன! ஆனால் இன்றுவரை பிரதேச செயலாளர் விருது கிடைக்கப்பெறாமைக்கு காரணம் இரகசியம் பேணலில் அவர் விட்ட தவறேயல்லவா!

# தேசிய SMS செய்திகள்

- **நாட்டில் மோசமான நீர்த் தட்டுப்பாடு**

14 வருடங்களின் பின்னர் ஏற்பட்டுள்ள மிக மோசமான நீர்த் தட்டுப்பாட்டினால் பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- **பேஸ்புக்கில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துக்களை பகிரவில்லை**

தான் எந்தவொரு சமயத்திற்கு எதிராகவோ, எந்தவொரு பொதுமகனுக்கு எதிராகவோ கருத்து வெளியிடவில்லை எனவும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் தான் கருத்து பகிரவில்லை எனவும் ஞானசார தேரர் கூறினார்.

- **இலங்கைக்கு 75ஆம் இடம்**

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் நடுத்தர அபிவிருத்தி நாடுகளின் பட்டியல்களின் அடிப்படையிலேயே இலங்கைக்கு 75ம் இடம் கிடைத்துள்ளது.

- **முஸ்லிம் கலாசார உடைகளுக்கு அனுமதி**

தேசிய பாடசாலைகள் உட்பட அனைத்து பொது பாடசாலைகளிலும் முஸ்லிம் பெற்றோர் ஹிஜாப் அணிந்து செல்ல அனுமதி வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- **அதிகூடிய சம்பளம் 350 அமெரிக்க டொலர்**

வெளிநாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி முதல் அந்தந்த நாடுகளில் ஆகக்கூடிய சம்பளமாக 350 அமெரிக்க டொலர்களை பெற்றுத்தருவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் நலன்புரியமைச்சு நடவடிக்கை எடுக்குமென அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

- **கல்வாரியில் சிலைகள் உடைப்பு**

வவுனியா கோமரசன் குளத்தில் உள்ள கல்வாரி திருத்தலத்தின் மீதே 23.07 இரவு தாக்குதல் விசமிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அங்கிருந்த சிலைகள் சேதமடைந்துள்ளது எனவும் ஆலயத்தின் தலைவர் என்.அருளானந்தம் தெரிவித்தார்.

- **கட்டாய ஓய்வில் அடிபணியாத அதிகாரிகளை அனுப்ப திட்டம்**

2015 ஆம் ஆண்டு நடத்த உள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து, ஆட்சியாளர்கள் தமக்கு அடிபணியாத அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தலைமை அதிகாரிகளை பலவந்தமாக ஓய்வுபெற செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

- **இராணுவ பாதுகாப்பு வலயத்தில் பெரும் அழிவுகள்**

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பல கிராமங்களில் பொதுமக்களின் வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டிடங்கள் என்பன எதுவுமே இல்லாமல் வெட்டவெளியாக இருப்பதாக அங்கு சென்று திரும்பியவர்கள் கூறியுள்ளார்கள்.

- **17 யுவதிகளை ஏமாற்றியவர் கொழும்பில் கைது**

விவாகம் புரிவதாக ஏமாற்றி 17 யுவதிகளிடம் நிதி மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பல பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

- **குழறுநிலை விவாதத்தின் பின் முடிவெடுக்கப்படும்**

வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட 3 நியதிச் சட்டங்களில் முத்திரை வரிகள் தொடர்பான சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய சட்டங்களிலுள்ள சில சரத்துக்கள் தொடர்பாக ஆராயுமாறும் ஆளுநர் பரிந்துரைத்துள்ளார் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

# குறுக்கெழுத்து புதிர் 019

முடிவுத் திகதி : 01.08.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | | | | 20 | | | ■ |
| | 2 | 3 | | ம் | | 4 | | 24 |
| 5 | | 22 | 23 | ■ | | 28 | 21 | |
| 6 | | | கா | 25 | ■ | | | |
| | ■ | ■ | | | 7 | | | |
| 8 | | | 9 | டு | | ■ | 10 தி | |
| 11 | | தி | | | 13 | | | 27 வு |
| 12 தி | | | | 26 | 14 | 15 | | |
| 16 | | | ■ | 17 | | ■ | 18 | |

## மேலிருந்து கீழாக

1. பூச்சியத்தை கண்டு பிடித்த நாட்டினர்.
19. களைப்பின் நிமித்தம் இவரையும் அழைப்பர்.
20. 'அப்பகோப' களாக இருப்பவர்களை இவ்வாறு அழைக்கலாம்.
21. இது அதிகம் கொண்டவர்களுடன் பழகுதல் சிரமம்.
22. ரொடி, தாதாக்களை இவ்வாறும் அழைப்பர்.
23. தேயிலைத் தோட்டத்தின் மேற்பார்வையாளர். - திரும்பியுள்ளது.
4. தாய்க்குப் பின் ...........
24. மாறுபடுதலை இவ்வாறும் அழைப்பர்
25. குட்டு வின் ஒத்த ஓசை சொல் 'நெ..'
8. யுத்தகளத்தில் ஓடிய வெள்ளம்.
12. எட்டைக் கொண்டது.
26. தமிழ்நாட்டில் வெள்ளி, சின்ன என இரு வகைகளைக் கொண்டது.
27. பணம் இல்லாட்டியும் ஜமீந்தாருக்கு .......... குறையவில்லை. - குழம்பியுள்ளது.

## இடமிருந்து வலமாக

1. திருகோணமலையின் வரலாற்றுச் சின்னங்களில் இதுவும் ஒன்று.
2. அன்னையை இவ்வாறும் அழைப்பர்.
3. கோடாத இக்கட்டையை உருட்டி விளையாடலாம்.
4. இந்திய மாநிலம் மேற்குவங்கத்தின் முதல்வராக இருந்தவர். - திரும்பியுள்ளது.
5. மரத்தை சுற்றி அமைக்கும் மேடை
6. எருமையில் வரும் இவனைக் கண்டு அஞ்சாதோர் உண்டா?
7. பாண்டவர்களின் மூத்தவரை இவ்வாறும் அழைப்பர்.
8. முன்னைய காலத்து அரசர்கள் இதை நிறுவுவதில் பெரும் பங்காற்றியுள்ளார்கள்.
9. இது சிறிதாயினும் இதன் காரம் பெரிது.
10. விக்ரம் நடித்த படங்களில் ஒன்று.
11. பரமசிவனை இவ்வாறும் அழைப்பர்.
12. தமிழ்மூவாயிரம் என அழைக்கப்படுவது.
13. பூமியில் செய்யப்படும் ஆராய்ச்சியை இவ்வாறு அழைப்பர்.
14. இரண்டெழுத்து இதைப் பருகுவதால் குடி கெடும்.
15. இயற்கையின் சமநிலையை பேணுவது. - திரும்பியுள்ளது.
16. வைணவருடன் போட்டியிடும் சமயம்.
17. இச்சகோதரர்கள் இப்போதும் ஞாபகப்படுத்தப் படுகிறார்கள்.
18. காமதேனு இவ்வினத்தைச் சார்ந்தது.
28. அழகிய பெண்களை இவ்வாறு அழைப்பர்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159அ. கடற்கரைக்காட்சி வீதி. திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## 018 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வா | ணி | 12 ப | ம் | ■ | 13 வா | 2 வ | 14 ச | ம் |
| ச | ■ | 3 த | ன் | மா | ன | ம் | கு | ■ |
| னை | ■ | வி | ■ | ■ | ம் | 4 பு | னி | ல் |
| 5 மு | த | 15 சு | ர | பி | 16 அ | ■ | 6 கு | டா |
| 7 க | டு | வ | ன் | 17 வெ | ட் | டி | ள | 18 அ |
| லா | 19 கூ | ர் | ■ | ண் | டை | 20 தா | ன் | ட் |
| ய | ட | க் | ■ | க | ■ | ய் | வா | ச |
| ர் | ல் | க | ■ | ட் | ■ | 8 ம | ம | தை |
| 9 க | ட | ம் | 10 த | டி | 11 க | ண் | ண | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. முதலாந் திகதி புதன் கிழமை நடைபெறவிருந்த மரநடுகை விழா தவிர்க்க முடியாத காரணத்தால் 15ம் திகதி நடைபெறும் என உரிய அதிகாரியால் அறிவித்தல் விடுக்கப்பட்டது. மரநடுகை விழா நடைபெறவிருக்கும் நாள் எது?
1. புதன்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. வியாழக்கிழமை

02. கடிகார முகத்தில் கூர்ங்கோணத்தைக் காட்டும் நேரம்?
1. 9.00 2. 5.00 3. 2.00

03. பின்வரும் பூக்களிடையே வேறுபட்ட பூ எது?
1. தாமரை 2. ரோசா 3. எக்சோரா

04. ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
1. கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
2. கைமருந்தை காயத்தின் மீது பூசுதல்
3. கொடுக்கை அகற்றிய பின் கைமருந்தை பூசுதல்

05. சுதன் தனது வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 200மீ தூரம் சென்ற பின், வடக்கு நோக்கி திரும்பி 100மீ சென்றான் இதன் பின் கிழக்குத் திசை நோக்கித் திரும்பி 500மீ தூரம் சென்று பாடசாலையை வந்தடைந்தான் எனில், சுதனின் வீடு பாடசாலைக்கு எத்திசையில் உள்ளது?
1. மேற்கு 2. வடகிழக்கு 3. தென்மேற்கு

06. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. இறுங்கு 3. அரசு

07. மாடுகளின் வால், முதுகுகளில் ஒட்டியபடி பரம்பலடையும் தாவரவித்து எது?
1. குண்டுமணி 2. நாயுண்ணி 3. நாயுருவி

08. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2∴5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
1. 300மீ, 900மீ 2. 600மீ, 900மீ 3. 900மீ, 600மீ

09. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 8 3. 6

10. பின்வரும் வாக்கியங்களை கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்திக் கூறுவது?
அ. அப்பா பரிசு வாங்கித் தந்தார்.
ஆ. பரீட்சைக்குத் தோற்றினேன்.
இ. விடாமுயற்சி வெற்றி தரும் என ஆசிரியர்கள் பாராட்டினர்.
ஈ. மிகவும் கடினமாகப் படித்தேன்.
உ. பரீட்சையில் அதியுயர் சித்தியெய்தினேன்.
1. அஇஉஈஆ 2. ஈஆஉஅஆ 3. ஈஆஉஆஅ

11. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்

12. இரவில் மலரும் பூக்களினது நறுமணம் அதிகமாக இருப்பதற்கான காரணம் யாது?
1. நிலவொளி அதிகமாக இருப்பதால்
2. வண்டுகளைக் கவர்வதற்கு 3. தாம் மலருவதைத் தெரிவிப்பதற்கு

13. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி

14. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை 2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை

15. மின்சாரத்தைச் சிக்கனமாகப்பாவிக்க பயன்படுத்தக்கூடிய மின்குமிழ்
1. மெக்குரி மின்குமிழ் 2. புளோர் ஒளிர் மின்குமிழ்
3. நிப்போன் மின்குமிழ்

16. பொதி செய்யப்பட்டுள்ள உணவுப் பொதியினுள் சிலிக்கா ஜெல் வைப்பதன் நோக்கம்
1. நிறம் மாறாது 2. சுவைக்கு
3. பொதியிலுள்ள வளிய்ய உறிஞ்சியெடுக்க

17. மதனின் வயது 11 வருடங்கள். அவனுடைய தாயின் வயது 38 வருடங்கள் ஆகும். மதன் பிறப்பதற்கு முன் அவனின் தாயின் வயது யாது?
1. 24 2. 27 3. 49

18. மாம்பழம் - சதை எனின், தோடம்பழம் .................
1. சுளை 2. வித்து 3. சோறு




**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# நிலைமையை புரிதல்

குட்டிக் கதை

ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் ஆட்சி காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்திற்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் "தல" கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்னவென்று கேட்ட போது "உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாரக இரு" என்று கட்டளை போட்டது "தல". ஏனென்று மன்னன் கேட்டான். "மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பலன் பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப் படும்" என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். யாரையும் அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் "ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?" என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான். வயோதிகர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார். "வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் உள்ளது. அதனிடம் போய்க் கேள்" என்று சொல்லி விட்டார்.



தலையை முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண்டிருந்த ஆந்தையிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை "எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித்துக் கேள்" என்று சொல்லி விட்டு போய் விட்டது.

காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான். அதனிடம் கேட்டபோது. "எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரியில் ஒரு ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவிருக்க வாய்ப்பிருக்கிறது" என்று நம்பிக்கையை வளர்த்தி விட்டது.

மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். மன்னன் அதனிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே "ஆமாம். அவனால்தான் இந்த ஏரியும் இருக்கிறது. இவ் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன" என்று சொன்னது. அப்போது மன்னன் "நானேதான் அந்த இந்திரத்யும்னன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தியதாக நினைவில்லையே." என்று நம்பிக்கை இழந்து போய் ஆமையிடம் சொன்னான். ஆமையும் "நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் தானமாக வழங்கிய பசுக்களை மக்கள் இந்தப் பகுதியிலுள்ள புல் தரையில் மேய விட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தன் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்திருக்கிறேன். பல உயிரினங்களும் வாழ்கின்றன." என்றது.

தூரத்தில் சொர்க்கபுரி விமானம் வருவது மன்னனுக்குத் தெரிந்தது.

- nra;Ak; ey;y fhupaq;fs; gy jiyKiw jhz;bAk; thOk; -

## சிந்திக்க .. ..

பேச வேண்டிய நேரத்தில்
அமைதியாக இருந்துவிட்டால்:
அமைதியான நேரத்தில்
நிம்மதியாக இருக்கமுடியாது!

## கெட்டிக்காரரே!

குஞ்சுத் தம்பியே - நலம்
குழப்பிடாதடா!
பிஞ்சுத் தங்கையே - துயர்
பெருக்கிடாதடி!

ஆடிப்பாடு வீர் - விளை
யாடி மகிழுவீர்!
கூடியாடுவீர் - ஏதம்
குறை வராமலே!

அம்மை அப்பனார் - வேலை
அங்கு செய்கிறார்!
உம்மைப் பார்த்திட - மாலை
ஓடி வருவராம்!

பாட்டி பாட்டனார் - உம்மைப்
பார்த்துக் கொள்ளுவோம்!
கேட்டு நடந்திடின் - நீவிர்
கெட்டிக்காரரே!



— [illegible] —
(சச்சந்தீவு, சீன்னியா)



# சிறுவர் முரசு

## Grammar

Use the continuous tenses for actions and happenings. Some words are not actions verb.
Ex: I'm hungry. I want something to eat.
Do you understand what I mean?
We normally use the present simple (not continuous)
Ex: Do you see that man over there?
Listen! Can you hear something?
Eg: Put correct or wrong
1. I'm seeing the manager tomorrow morning. ............
2. I'm feeling hungry. Is there anything to eat? ..................
3. Are you believing in God? ...............
4. I'm thinking this is your key. Am I right? ......................

Read the note from your friend.
Write a note to her and answer her questions.
I'll make the meal tonight. Would you like meat or fish? What vegetables do you want? What time will you be home?
Best wishes. - Krisha-

## நற்பழக்கங்கள்

நம்பிக்கை என்பது பிறரிடம் உள்ள நேர்மைக்கும் பொறுப்புணர்வுக்கும் உள்ள அசைக்க முடியாத நம்புதல்தான்.

நார்மன் வின்செண்ட் பியலின் நேசிக்கும் கதையை இங்கு சொல்வது மிகவும் பொருத்தமாகும். எனக்கு ஒரு நண்பர், அவரது மகன் பேஸ்பால் விளையாட்டில் ஒருவிதமான அக்கறை கொண்டுவிட்டான். ஆனால் எனது நண்பருக்கு அந்த விளையாட்டு பிடிக்காது. ஆனால் ஒரு வெயில் காலத்தில், தன் மகனைக் கூட்டிக்கொண்டு பல ஊர்களுக்கு 6 வார காலமாக பல போட்டிகளை காணச் சென்றார்கள். நிறைய பணமும் செலவானது. ஆனால் இப் பயணம் அப்பா, மகன் உறவிலே ஒரு நல்ல திருப்புமுனை ஏற்பட்டு இணைபிரியா தொடர்பு ஏற்பட்டது. திரும்பி வந்த பின் நீங்கள் பேஸ்பாலை மிகவும் விரும்புகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர் "இல்லை" என்று பதில் தந்தார். ஆனால் எனது மகனைத்தான் எனக்கு ரொம்ப பிடிக்கும் என்றார்.

தப்பு செய்வது மனித இயல்பு அதனை மன்னிப்பது கடவுள் இயல்பு. பிறரை மன்னித்து ஏற்றுக்கொள்வது ஒருவருக்கு நல்ல அமைதியையும் நல்ல முழு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். பிராணிகளிடம் கூட அன்பாக இருங்கள். ஏழை எளியோர், உடல்நலமில்லாதோர் ஆகியோரிடமும் அன்புடன் பழகுங்கள்.

முற்றும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. நேர்விளிம்பு, கவராயம் அளவுகோல் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டுக.

1. AB=8cm, AD=5.5cm, கோணம் DAB= 60பாகை, AB//DC, DC = 6cm ஆகவுள்ள சரிவகம் ABCDஐ அமைக்க. பரும்படிப் படம் அமைத்துக் கொள்க.
2. கோணம் ACD யை அளந்தெழுதுக.
3. B, C ஆகிய புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் செல்லும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.
4. புள்ளி C யில் CD க்கு செங்குத்து அமைக்க
5. B, C ஆகியவற்றில் சமதூரத்திலிருந்து செல்லும் புள்ளியின் ஒழுக்கும் C யில் அமைத்த செங்குத்தும் சந்திக்கும் புள்ளியை E எனக் குறிக்க.
6. E ஐ மையமாகவும் CE ஐ ஆரையாகவும் கொண்ட வட்டத்தை அமைக்க.
7. வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.

02. 1) உருளை வடிவான சீரான உலோகக் குற்றியொன்றின் விட்டம் 21cm ஆகும். உயரம் 12cm எனின்


1. இங்கு $\pi$= 3.14 எனக் கொண்டு அடியின் பரப்பளவைக் கிட்டிய முழு எண்ணிற்கு காண்க. (மடக்கையைப் பயன்படுத்துக.)
2. உலோகக் குற்றியின் கனவளவை (1) இல் பெற்ற இறுதி விடையைப் பயன்படுத்தி காண்க.

2) 1366$cm^3$ கனவளவுள்ள உலோகத் துண்டொன்று உருவாக்கப்பட்டு 2cm விட்டமுடைய கோளங்கள் செய்யப்பட்டன. உருக்கி வார்த்தலின் போது 110$cm^3$ உலோகம் வீணாகியது எனக் கொண்டு ஆக்கப்பட்ட கோளங்களின் எண்ணிக்கையைக் காண்க. ($\pi$= 3.14)

03. பொறி ஒன்றைக் கைக்காசுக்கு விற்கும் போது விலை 90,000 ஆகும். அதனை வாடகைக் கொள்வனவு முறையில் பெறுவதாயின் முதலில் பொறியின் விலையின் அரைவாசியைச் செலுத்தியும் மீதியை 4,250 வீதம் 24 மாதம் தவயைகளில் செலுத்தியும் வாங்கலாம். இதன்படி,

1. தவணைமுறையில் செலுத்துவதற்கு எஞ்சிய கடன் பணம் யாது?
2. 24 மாதத் தவணைகளிலும் செலுத்தும் மொத்தப்பணம் யாது?
3. செலுத்தப்படும் மொத்த வட்டி யாது?
4. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
5. ஒரு மாத அலகு வட்டி எவ்வளவு?
6. வட்டியின்றி ஒரு தவணைப்பணம் எவ்வளவு?
7. செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் யாது?

04. மோட்டார் வண்டி ஒன்று 150Km தூரத்தை மாறாக்கதி $NKmh^{-1}$ செல்கின்றது. கதி மணித்தியாலத்திற்கு 20Km ஆல் குறைந்தால் அப்பிரயாண நேரம் 2 மணித்தியாலத்தினால் அதிகரிக்கின்றது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி இருபடிச்சமன்பாடு ஒன்றை உருவாக்கி புகைவண்டியின் மாறாக்கதியைக் காண்க.




05. கிழக்கு மேற்காக அமைந்துள்ள நேர்பாதை ஒன்றில் செல்லும் ஒருவனுக்கு P என்னும் புள்ளியிலிருந்து நோக்கும் போது C என்னும் நிலைக்குத்தான தென்னை மரம் ஒன்றின் திசைகோள் 108பாகை ஆகும். அவர் P யிலிருந்து 140m தூரம் கிழக்கு நோக்கிச் சென்று நோக்கும் போது தென்னை மரத்தின் திசைகோள் 132பாகை எனக் காணப்பட்டது.

1. உருவைப் பிரதி செய்து பூரணப்படுத்தி மேற்கண்ட தரவுகளை அதிற் குறிக்க.
2. பாதையிலிருந்து தென்னை மரத்திற்குள்ள மிகக் கிட்டிய தூரத்தைக் காண்க.
3. P யிலிருந்து தென்னை மரத்துக்குள்ள தூரத்தைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

01. தாவரங்களின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் ஒரு. கட்டத்தைப் பின்வருவனவற்றில் எது குறிக்கின்றது?
1. வித்திலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
2. கிளையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
3. வேரிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
4. இலையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்

02. ஒரு தாவரத்தின் பூவை அவதானித்த மாணவன் ஒருவன் அதனைப் பற்றிய பின்வரும் விபரங்களைக் குறித்துக் கொண்டான். அதன் அல்லிகள் நிறத்தை உடையன. கேசரங்கள் அடியிலிருந்து அமுதம் வெளியே வந்து கொண்டிருந்தது. மகரந்தக் கூடுகள் குறிக்குக் கீழே அமைந்திருந்தன. இப்பூ எக்காரணியின் மூலம் மகரந்தச் சேர்க்கை அடைவதற்கு வடிவமைந்திருக்கின்றது?
1. பூச்சிகளின் மூலம்    2. காற்றின் மூலம்
3. நீரின் மூலம்    4. செயற்கை முறையின் மூலம்

03. கூர்ப்பு நடைபெறும் விதத்தை விளக்குவதற்கு டாவின் எடுத்துரைத்த இயற்கைத் தேர்வுக் கொள்கையின் நான்கு படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடை யாது?
அ. தக்கன பிழைத்தல்    ஆ. மாறல்    இ. மிகையுற்பத்தி    ஈ. போட்டி
1. அ, ஆ, இ, ஈ    2. ஆ, இ, அ, ஈ    3. இ, ஆ, ஈ, அ
4. ஆ, ஈ, அ, இ

04. தெறி வினைக்காகச் சம்பந்தப்படும் நரம்புக்கலங்களினூடாகக் கணத்தாக்கங்கள் செல்லும் சரியான ஒழுங்கு முறை யாது?
1. புலன் நரம்புக்கலம்  இயக்க நரம்புக்கலம்  இடைத்தூது நரம்புக்கலம்
2. புலன் நரம்புக்கலம்  இடைத்தூது நரம்புக்கலம்  இயக்க நரம்புக்கலம்
3. இடைத்தூது நரம்புக்கலம்  இயக்க நரம்புக்கலம்  புலன் நரம்புக்கலம்
4. இடைத்தூது நரம்புக்கலம்  புலன் நரம்புக்கலம்  இயக்க நரம்புக்கலம்

05. அணு எண் 19 ஆன மூலகம் ஒன்றின் இறுதிச் சக்திப் படியில் இருக்கும் இலத்திரன்களின் எண்ணிக்கை யாது?
1. 1    2. 9    3. 18    4. 19

<u>கட்டமைப்பு வினாக்கள்</u>

01. ஒரு இன அங்கி அடுத்த சந்ததியை உருவாக்கும் போது அவ்வங்கியின் இயல்புகள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதனால் பெற்றோரின் இயல்புகளைக் கொண்ட அடுத்த சந்ததி உருவாகின்றது. இருப்பினும் உருவாகிய அடுத்த சந்ததியில் பல வேறுபாடுகள் காணப்படலாம். இவைகளுக்குப் பல்வேறு காரணங்கள் காரணமாக அமைகின்றன.

1. பாரம்பரியம் என்றால் என்ன? ..................................................
2. பரம்பரை அலகு என்றால் என்ன? ..................................................
3. பிறப்புரிமை அமைப்பு என்றால் என்ன? ..................................................
4. பரம்பரை இயல்புகள் ஊடுகடத்தப்படுவது பற்றி தெளிவான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானி யார்? ..................................................

5. தூய வெள்ளையான, உயரமான பன்றிகளுக்கும் தூய, கறுப்பான, கட்டையான பன்றிகளுக்குமிடையே இனக்கலத்தல் நடைபெற்றது.
அ. $F_1$ சந்ததியின் பெற்றோரின் பரம்பரை அலகைத் தருக?
ஆ. $F_1$ சந்ததி எவ்வாறு இருக்கும்?
இ. இவ் இனக்கலத்தலின் போது $F_1$, $F_2$ சந்ததிகள் ஊடுகடத்தப்படும் முறையைத் தருக.
ஈ. $F_2$ சந்ததியின் பரம்பரை அலகைத் தருக.
உ. தோற்ற அமைப்பு விகிதத்தை தருக.
ஊ. பிறப்புரிமை அமைப்பு விகிதத்தைத் தருக.

02.
1. உராய்வு விசை என்றால் என்ன?
2. உராய்வு விசையின் எல்லைப் பெறுமானத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக.
3. உராய்வு விசையை எவ்வாறு குறைக்கலாம்?
4. நியூற்றனின் முதலாவது விதியைத் தருக.
5. உந்தம் என்றால் என்ன?
6. 5Kg திணிவின் மீது 8N விசை பிரயோகிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் ஆர்முடுகல் என்ன?
7. அன்றாட ஆர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.
8. அன்றாட அமர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

## பாடம் : வரலாறு

பகுதி 01

01. டில்லிசுல்தான் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
1. தலைநகர் வேதகிரிக்கு மாற்றப்பட்டமை
2. இந்துக்களின் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பெற்றமை
3. பாபர்மன்னனின் படையெடுப்பு
4. பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை

02. இலங்கையின் நீர்வளநாகரிகதொழினுட்பத்தில் நுண்ணளவுத் திட்டத்தில் கட்டப்பட்ட அதிசயக்கால்வாய் என கருதுவது
1. வசபனால் கட்டப்பட்டசுரங்கவழிநீர்ப்பாசனம்
2. தாதுசேனனின் ஜயகங்கைகால்வாய்
3. மகாசேனனின் பப்பதந்தகால்வாய்
4. 1ம் பராக்கிரமபாகுவின் அங்கமட்டில்லகால்வாய்

03. இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும், அதனை ஆரம்பித்தவரையும் காட்டும் சரியான ஒழுங்கு
1. இலங்கைகொமியூனிஸ கட்சி - . விக்கிரமசிங்க
2. லங்காசமசமாஜக் கட்சி - பெரேரா
3. ஐக்கியதேசியக்கட்சி - சேனநாயக்கா
4. தமிழரசுக்கட்சி - .செல்வநாயகம்

04. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார விளைவு அல்லாதது
1. பெருந்தெருக்கள்,புகையிரதப்பாதை அமைப்பு
2. தேயிலை,போல்பிக், இறப்பர்தோட்டம் ஆரம்பிப்பு
3. தோட்டதொழிலாளர், நகர்ப்புறத் தொழிலாளர்,வர்த்தகம் உருவானமை
4. கொழும்புத்துறைமுகம் சர்வதேசதுறைமுகமாக விரிவடைந்தமை

05. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலகமகாயுத்தத்தின் ஒருவிளைவு எனக் கருதப்படுவதுஎது?
1. சர்வதேசசங்கத்தின் தோற்றம்    2. ஐக்கியநாடுகள் சபை தோற்றம்
3. வேர்செயில்ஸ் உடன்படிக்கை
4. ஐரோப்பாவின் பேரரசுகள் பல அழிந்தமை

பகுதி 02.

01. சீனா உலக வல்லராசாக மாறுவதற்கு பங்களிப்பு செய்தது அங்கு பல கட்டங்களில் நடந்த புரட்சிகளாகும்
அ. 1. சீனப் புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்படுபவர்
2. நவீன பொதுவுடமை சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்படுபவர்
3. தண்டனை வழங்கும் செயற்பாடு மூலம் படைத்தலைவர்களின் அதிகாரத்தை ஒழித்த இராணுவ தளபதி
ஆ.சீனாவின் வளர்ச்சிக்கு கோமிங்டாங் கட்சியால் ஆற்றப்பட்ட பணிகள் நான்கை தருக?
இ.சீனாவில் கொமியூனிஸ வாதத்தை வளர்க்க மாவோ சேதுங் முன்னெடுத்த இரு நடவடிக்கைகளை விவரிக்குக.
ஈ. சீனாவில் கொமியூனிஸ ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றை சுருக்குமாக விவரிக்குக.

02. இங்கிலாந்தில் தோன்றிய கைத்தொழில் புரட்சி ஐரோப்பியாவில் மட்டுமின்றி உலகில் பல நாடுகளுக்கு பரவி கைத்தொழில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

1- இங்கிலாந்தில் கைத் தொழில் புரட்சி ஏற்படுத்திய மூன்று துறைகளும் எவை?
2- பின்வரும் கண்டு பிடிப்பாளர்களின் கண்டு பிடிப்புக்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
(தொலைக்காட்சி, தொலைநோக்கி, தார்வீதி அமைக்கும் முறை, தொலைபன்னி, வானொலி, பாதுகாப்பு விளக்கு, தந்திச்சேவை. கைபோக்கிக்கப்பல்)
1. ஜோன் லொகி பெயார்ட் 2. ஜோன் மெக்கடம் 3. கிரஹம் பெல்
4. மார்க்கோணி
3- இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்படுத்துவதில் பங்களித்த காரணிகள் இரண்டை தருக?
4- கைத்தொழிற் புரட்சியில் ஏற்பட்ட நன்மை, தீமைகள் மூன்றை காரணிகள் ஊடாக விளக்குக.



ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை வளாக ......

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அவ்விசாரணைகளில் முன்னாள் முதல்வர் மீது குற்றம் காணப்பட்டால் அவருடைய முதல்வர் பதவி நிரந்தரமாக நீக்கப்படும் எனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பதவி நீக்கம் தொடர்பாகக் .கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரைத் தொடர்பு கொண்டபோது அதனை உறுதிப்படுத்திய அவர் கடந்த 23ம் திகதி முதல் இத்தற்காலிகப் பணிநீக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இத்தற்காலிகப் பணிநீக்கம் தொடர்பாகப் பணிநீக்கப்பட்ட முன்னாள் முதல்வரான வைத்திய கலாநிதி. வர்ணகுலசிங்கம் அவர்களைத் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை.

புதிய பதில் முதல்வரான கலாநிதி. சி. ரகுராம் அவர்கள் இவ்விடயம் தொடர்பாகக் கருத்தைத் தெரிவித்த போது இது நிர்வாக ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் நிகழ்ந்துள்ளதாகவும் இதனைத்தவிர மேலதிகமாக எதனையும் கூற விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

## மேன்கமத்தில்.....

அளவில் காணிகள் அப்பிரதேசத்தில் பிரித்து சிங்களவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அம்மக்கள் மேலும் தெரிவித்தனர். பிரித்து வழங்கப்பட்டுள்ள காணிகளில் பலர் திண்காரை(சீமெந்து)த் தூண்களைக் கொண்டு வேலி அமைத்துள்ள- தாகவும் தெரிகின்றது.

இந்நடவடிக்கையில் தெஹிவத்தை சமுர்த்தி உத்தியோகத்தரே முன்நிற்பதாகவும் அதற்குப் பக்கபலமாக தெஹிவத்தை பன்சலையின் குரு இருப்பதாகவும் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அத்துமீறிய குடியேற்றத்திற்கு ஆதாரமாக இப்பிரதேசம் சேருவிலை பிரதேசச் செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் வருவதாகவும் அதனால் அங்கு குடியேற சேருவிலைப் பிரதேசச் செயலக நிர்வாக அலுவலரினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம் இருப்பதாகவும் தெரிகின்றது.

எனினும் இக்கடிதம் தவறானது என்பதுடன் இவ்வத்துமீறிய குடியேற்றத்தை நிறுத்தும்படி மூதூர் பிரதேசச் செயலகம் அறிவித்தல் விடுத்துள்ளதாகவும், காவல்துறை மற்றும் காணித் திணைக்களங்களுக்கு இவ்விடயத்தை மேன்கமத்தைச் சேர்ந்த மக்கள் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்போந்த விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள மூதூர் பிரதேசச் செயலாளரிடம் தொடர்பினை ஏற்படுத்த முனைந்தபோதும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கைகூடவில்லை.

## தொண்டர் நிறுவனங்கள்...

பெற்றுக்கொள்ளும் முன் அதற்கான அனுமதியை நிதிஅமைச்சிடம் இருந்து முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையை இலங்கைச் சட்டவாளர்களின் கூட்டு வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இந் நடவடிக்கைகள் மீது கடும் கேள்விகளை உருவாக்கியிருப்பதுடன் கடுமையான விமரிசனங்களையும் செய்துள்ளது.

இலங்கைச் சட்டவாளர்களின் கூட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கைப் பத்திரிகைகளின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் பொதுமக்களைத் திசைதிருப்பும் நோக்குடயவை என்றும் அவ்வறித்தல் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.



## பதறியடித்து.....

தப்பிக்கொள்ளவே பர்தா அணிந்த பெண் தலை தெறிக்க ஓடியதாகவும் விடயம் வெளிச்சத்திற்க வந்ததைத் தாங்கமுடியாத கணவர் தனது சொந்த மனைவியை அவ்விடத்தில் போட்டுத் தாக்கியதாகவும் எமது செய்தியாளருக்கு குறித்த மனைவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து விடயத்தை காவல்துறைக்குத் தெரியப்படுத்துமாறு அங்கு கூடிய மக்கள் ஆலொசனை வழங்கிக் கலைந்து சென்றுள்ளனர்.

## மனைவியை.....

கடிதங்களை அனுப்பியுள்ளார். இத்தம்பதியினருக்கு வயதான் விசேட தேவையை உடைய மகனொருவர் இருக்கும் நிலைமையிலும் மனைவி தவறான முறையில் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள அவர் விசேட தேவையுடைய சிறுவனை வைத்து பராமரிக்க முடியாமல் சிரமப்படுவதாகவும் தனது மனைவி மோசடி நடவடிக்கையினூடாக அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் கோரிக்கை நியாயமானது என பிரதேசசெயலாளரும், சிறுவர் நன்னடத்தை பிரிவும் கடிதங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்கியுள்ளன.

பிரதேச செயலாளரின் கடிதத்தில் மேற்படி கருணாகுலசிங்கம் சித்திரா என்பவர் கடந்த மாதம் நான்கு வயது நிரம்பிய சிறுவனை விட்டு வெளிநாடு சென்றுள்ளார். இதனால் விசேட தேவையுடைய அக்குழந்தை உளரீதியாகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## காவல்துறை....

கிண்ணியாப் பிரதேச சபைத் தலைவர் ஜவாத்துள்ளா ஆகியோர் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட மாடுகளை விடுவித்ததுடன் அங்கு கடமையிலிருந்த காவல்துறையினருக்கு அரச நடவடிக்கைகளை நிறைவேற்றக் குந்தகம் விளைவித்தார்கள் என்று காவல்துறையால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு கடந்த 10ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேற்குறிப்பிட்ட நால்வரும் நீதிமன்றுக்குச் சமூகமளிக்கவில்லை. அதையடுத்து நீதிமன்ற அழைப்பாணையின் பிரகாரம் கடந்த 23ம் திகதி இவர்கள் நால்வர் உட்பட எஞ்சிய அனைவரும் நீதிமன்றில் பிரசன்னமாயிருந்த போது வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி ரூபா 50,000 காசுப் பிணையிலும் ரூபா. 200,000 சரீரப் பிணையிலும் அவர்களை விடுதலை செய்துள்ளார்.

## கிழக்கையும் வடக்கையும்...

பெரும்பகுதியையும் விழுங்கிவிட்டது என அவர் வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

" அப்பாவிச் சம்பூர் மக்களை அவர்களின் வாழ்விடத்திலிருந்து கலைத்துவிட்டு இந்தியாவிற்கே அந் நிலம் வழங்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகப் பணிகள், வடக்கு தொடருந்துப் பாதைப் பணிகள் ஆகியவற்றையும் இந்தியாவே பெற்றுள்ளது. இவையாவும் எமது நாட்டைக் கண்ணை மூடிக்கொண்டு அயல்நாட்டுக்குத் தாரை வார்க்கும் செயற்பாடு" என அவர் வருணித்தார்.

## இந்தியாவைத் திருப்திப்.....

தெரிவிக்கையில் சீனாவின் உதவியுடன் விமான பழுது பார்த்தல் வசதிகளை கொண்ட பராமரிப்பு நிலையம் ஒன்றை திருகோணமலையில் அமைக்க திட்டமிட்ட போதும் அதன் நிர்வாகம் முழுமையாக இலங்கை விமானப்படையினரிடமே இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் இந்த தகவலை இராணுவப் பேச்சாளர் ருவன் வணிகசூரிய வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த திட்டத்துக்காக சீனாவின் விமானம் ஒன்றையே பயன்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் ருவன் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில் நிறுவப்படவுள்ள விமான பழுது பார்த்தல் நிலையத்தை சீனாவுக்கு பொறுப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல் தொடர்பிலேயே ருவன் வணிகசூரிய அரசாங்க தரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் எதிர்க்கட்சி த்தலைவர் நாடாளுமன்றில் எழுப்பிய குறித்த கேள்விக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பதிலளிக்கையில், இவ்வாறான பராமரிப்பு நிலையமொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது உண்மைதான். எனினும், எங்கு அமைப்பது என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை என்றும், திருகோணமலை நகரில் விமான பராமரிப்பு நிலையமொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கவில்லை எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஏற்கனவே கப்பல் பழுது பார்க்கும் நடவடிக்கைகளை இலங்கை கடற்படையினர் ஜப்பானிய உதவியுடனேயே மேற்கொண்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தொழில் வழிகாட்டல் ஆலோசனை கற்கை நெறி

(லியோன்)

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவையில் ஈடுபட்டு வருகின்ற ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட 25 ஆசிரியர்களுக்கு தொழில் வாண்மையை விருத்தி செய்யும் பொருட்டு 60 மணித்தியாலங்களைக் கொண்ட உளவியல் உளவளத்துணை மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை கற்கை நெறி நிகழ்வு மைலம்பாவெளி ரீம் கற்சர் உளவளத்துணை நிலையத்தில் நடைபெற்றது . மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகமும் தொழில்சார் உளவியல் உளவளத்துணை நிலையமும் இணைந்து நடத்திய இக் கற்கை நெறி நிகழ்வில் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் கே .பாஸ்கரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் . சிறப்பு விருந்தினர்களாக தொழில்சார் உளவியல் உளவளத்'துணை நிலைய ஸ்தாபகரும் இயக்குனருமான ஜேசு சபைத்துறவி அருட்பணி .போல் சற்குணநாயகம் ,மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலக திட்டமிடல் பிரதி பணிப்பாளர் .பி .கோவிந்தராஜா ,கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி .கங்கேஸ்வரன் ,மற்றும் முகாமைத்துவத்துக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் ..எஸ் சசிந்திரசிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர் . மற்றும் அதிதிகளாக உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ,ஆசிரிய ஆலோசகர்கள் ,அதிபர்கள் ,மற்றும் தொழில்சார் உளவியல் உளவளத்துணை நிலைய இயக்குனர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் . இக் கற்கை நெறி நிகழ்வினை மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களான .வி .மணிராஜ் , எ .ஜெயநாதன் மற்றும் வழிகாட்டல் ஆலோசனைக்கான ஆசிரிய ஆலோசகர் ஜி .கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் இதனை ஒழுங்கமைப்பு செய்துள்ளனர் . தொடர்ந்து வார இறுதி நாட்களில் இக் கற்கை நெறியினையும் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் மற்றும் பயிற்சிகளையும் அருட்பணி போல் சற்குணநாயகம் அடிகளாரும் , அமெரிக்காவில் இருந்து வருகை தர இருக்கின்ற உளவியல் உளவளத்துணையாளர் மைக் மக்னல்டி ஆகியோர் இணைந்து வழங்கவுள்ளனர் .இன் நிகழ்வினை வலயக்கல்வி அலுவலகம் மேற்பார்வை மீளாய்வினை மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸகாத் : ஒரு சமூகக் கடமை

முக்கியமாக உலோபித்தனம் என்ற கொடிய நோயிலிருந்து அவன் பாதுகாக்கப்பட்டு தயாள தனம் அவனில் குடிகொள்கிறது. இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் ஸகாத் பெரும் முக்கியத்துவம் காரணமாக அல்-குர்ஆன் தொழுகையோடு இதனை இணைத்து பேசியுள்ளது. நேரடியாக ஸகாத் என்ற கடமையை முப்பது இடங்களில் பிரயோகிக்கும் குர்ஆன் இருபத்தேழு இடங்களை தொழுகையுடன் இணைத்துள்ளது. மாத்திரமன்றி மக்கா காலப் பிரிவிலும் உத்தியோகபூர்வமாக இல்லாவிட்டாலும் ஸகாத்தோடு தொடர்பான உணவளித்தல் செலவு செய்தல் போன்றன தூண்டப்பட்டிருப்பதை பெரிதும் அவதானிக்கலாம். இஸ்லாத்தின் பிரதான ஐங்கடமைகளில் ஒன்றாக இதனை கணித்துள்ள நபி (ஸல்) அவர்கள் இத்துறையில் பொடுபோக்கு காட்டுவதை பெரிதும் எச்சரித்துள்ளார்கள்.

இமாம் புஹாரி (ரஹ்) பதிவுசெய்திருக்கும் ஹதீஸ் பின்வருமாறு அமைகின்றது.

"யார் தனக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து அதன் ஸகாத்தை கொடுக்கவில்லையோ மறுமையில் அவனுக்காக வழுக்குத் தலையுடைய வி'ப்பாம்பு சாட்டப்படும். அதன் இரு கண்களுக்கும் மேலாக இரு கரும் புள்ளிகள் இருக்கும். அது அவனுடைய உடலை சுற்றிவலைத்துக் கொள்ளும். பின்னர் அது அவனது சுன்னங்களைத் தீண்டியவாறு நான் உனது செல்வம் நான் உனது பொக்கி'ம் எனக் கூறும். பின்னர் நபி (ஸல்) அவர்கள் கீழ்வரும் அலுகுர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்

தொடரும் .. ..




## வாரமொரு ஜோக்

- அருணன் -

மிகவும் பின் தங்கிய பகுதியிலுள்ள ஓர் கிராமத்தின் தபாலகம் அது. அங்கு உதவியாளர், தபாற்காரர், தபால் அதிபர் அனைத்தும் ஒருவரே. தபால்களை சேகரிப்பது, அனுப்புவது, விநியோகிப்பது என சகலதும் இவரே. அன்றும் வழமைபோன்று தனது பணிக்காக தபாலகம் வந்து தபால் பெட்டியில் சேகரித்த தபால்களை எடுத்து ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தவரை கடவுளுக்கு என முகவரியிடப்பட்ட ஓர் கடித உறை கவர்ந்தது. ஆச்சரியத்துடன் அக் கடிதத்தை பிரித்தார். ஓர் சிறுமியின் ஏக்கம் அதில் தெரிந்தது. "அன்புள்ள இறைவனே! ஏனைய குழந்தைகள் போல் நானும் நல்ல உடையணிந்து சுவையான உணவுண்டு ஆடி பாடி மகிழ்ந்திட ஆசையாக உள்ளது. கூலி வேலை செய்து எனது தந்தை எடுத்து வரும் பணம் ஒரு வேளை உணவுக்குதானும் போதுமானதாக இல்லை. ஆயினும் இன்னும் ஒரிரு தினங்களில் வரபோகும் கிறிஸ்மஸ் பண்டிகையின் போதாவது அழகான உடை உடுத்தி உண்டு மகிழ்ந்திட எனக்கும் ஆசையாக உள்ளது. நீங்கள் என்மீது மனமிரங்கி ஒரு இரண்டாயிரம் ஆயிரம் ரூபாய் பணமனுப்பி உதவினால் நானும் ஏனைய குழந்தைகளுடன் மகிழ்வாய் இருப்பேன். அன்புள்ள இறைவனே என்மீது இரக்கம் வையும் என எழுதப்பட்டிருந்தது."



கடிதத்தை படித்தவரின் இதயம் கனத்தது. அக்கடிதத்தை அப்படியே விட்டெறிய அவரால் முடியவில்லை. தனது ஏழ்மை நிலையிலும் தன்னிடமிருந்த சிறிதளவு பணம் ஏறத்தாள ஆயிரம் ருபாய் வரையிலே இருந்தது. மீண்டும் அலுவலகம் வந்தவர் ஓர் கடித உறையில் அப்பணத்தை வைத்து ஒட்டி அதில் சேர்ப்பவர் பகுதியில் கடவுள் என எழுதி தனது சைக்கிள் வண்டியுடன் கிளம்பினார். அச்சிறுமியின் குடிசையை கண்டு பிடித்து கடிதத்தை கையளித்தார். மனநிறைவுடன் அலுவலகம் திரும்பினார்.

கிறிஸ்மஸ் பண்டிகையும் நிறைவடைந்தது. சில நாட்களின் பின் ஒரு நாள் அலுவலகம் சென்ற அவரை மீண்டும் அதே போன்று கடவுளுக்கு என முகவரியிடப்பட்ட கடிதம் கண்ணில் பட்டது. கடிதத்தை ஆவலுடன் எடுத்து படித்தார்...! கிட்டத்தட்ட மயக்கம் போடாத குறை ஒன்றுதான். அப்படி என்னதான் அக் கடிதத்தில் இருந்தது.?

அன்புள்ள இறைவனே..! என்மீதும் இரக்கம் வைத்து பணம் அனுப்பியமைக்கு நன்றி. ஆனாலும் இறைவனே..! அந்த திருட்டு தபால்காரன் நீங்கள் எனக்கு அனுப்பிவைத்த இரண்டாயிரத்தில் ஆயிரம் ரூபாவை திருடிவிட்டு மீதியையே எனக்கு கொடுத்து சென்றுவிட்டார். ஆகையினால், இனிமேல் எனக்கு பணம் அனுப்பும் போது அந்த திருட்டு தபால்காரனிடம் மட்டும் பணத்தினை கொடுத்து விடாதீர்கள் என் எழுதியிருந்தது.

இதை பார்த்தபின் மயக்கம் போட்டு விழாமல் அவர் வாடா மாப்பிள வாழைபழ தோப்புல ஏன பாட்டுப்பாடி நடனமா ஆடுவார்....!....?




## கோ.மா பணியாரம்

**தேவையான பொருட்கள்**

கோதுமை மாவு - ஒரு கப், உருளைக்கிழங்கு – 1, பெரிய வெங்காயம் - 1, பட்டாணி - கால் கப், மிளகாய்தூள் - ஒரு டேபிள் ஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை**



உருளைக்கிழங்கையும் பட்டாணியையும் வேகவைக்கவும். பின் உருளைக்கிழங்கை தோல் உரித்து, வெங்காயம், மிளகாய் தூள், சிறிது உப்பு சேர்த்துப் பிசைந்து சிறிய உருண்டைகளாக உருட்டவும். கோதுமை மாவில் உப்புப் போட்டுக் கரைத்துக் கொள்ளவும். பின்னர் உருட்டி வைத்துள்ள மசாலா உருண்டைகளை, கோதுமை மாவில் தோய்த்து, குழிப்பணியாரக் கல்லில் எண்ணெய் விட்டு, போட்டு, திருப்பியதும் எண்ணெய் விட்டு பொன்னிறமாக வெந்ததும் எடுக்க வேண்டும்.

## தேங்காய் ரசம்

**தே.பொருட்கள்**

தேங்காய் துருவல் - 1 கப், பூண்டு – 5, தக்காளி விழுது – 1-2 கப், பச்சை மிளகாய் - 3, மிளகுத்தூள் - 1 தே.கரண்டி, மல்லித்தூள் - 1 தே.கரண்டி, கொத்தமல்லி தழை - 1 கைப்பிடி அளவு, உப்பு - தேவையான அளவு, நெய் - 1 மே.கரண்டி, சீரகம், கடுகு – சிறிதளவு, மெலிதாகச் சீவிய பூண்டு – 2, கறிவேப்பிலை - தேவையான அளவு

**செய்முறை**



தக்காளியை சுடு நீரில் வைத்து, 10 நிமிடம் கழித்து, மேல் தோல் நீக்கி விட்டு விழுதாக அரைக்கவும். பின் தேங்காய், பூண்டு, பச்சை மிளகாய், கொத்தமல்லி தழை ஒன்றாகச் சேர்த்து விழுதாக அரைக்கவும். ஒரு பாத்திரத்தில், தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, அதில் தக்காளி விழுது சேர்த்துக் கொதிக்க விடவும். பின் அதில் அரைத்த தேங்காய் விழுது, உப்பு, மிளகு தூள், மல்லித்தூள் போட்டு லேசாக கொதிக்க விடவும். நுரைத்து வந்தால் போதும். நெய்யில் தாளித்து ரசத்தில் சேர்க்கவும்.

## கருவளையமா!!



பெண்களுக்கு மட்மின்றி ஆண்களுக்கும் பெரிய பிரச்சனையே கண்ணுக்கு கீழே ஏற்படுகின்ற கருவளையம் தான். அந்த கருவளையத்திற்கு தீர்வு தருகிறது எலுமிச்சை.

- அரை டீஸ்புன் எலுமிச்சைச் சாறுடன், 5 துளி தேன், ஒரு டீஸ்பூன் பார்லி பவுடர் கலந்து, முகத்தில் பூசி 5 நிமிடம் கழித்து கழுவுங்கள். எலுமிச்சைச்சாறு முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெயை நீக்கிவிடும். பார்லி பவுடர் சேர்ப்பதால் முகம் ப்ளீச் செய்தது போல் பளிச்சென்று பிரகாசிக்கும்.
- காய்ச்சல், தூக்கமின்மையால் கண்களுக்குக் கீழ் ஏற்படும் கருவளையத்தைப் போக்குகிறது எலுமிச்சை. 2 டீஸ்பூன் வெள்ளரி விதை பவுடருடன், அரை டீஸ்பூன் எலுமிச்சைச்சாறு சேர்த்து, இது கலக்கும் அளவுக்குப் பாலைவிட்டு பேஸ்ட் செய்யுங்கள். இந்த பேஸ்ட்டை கண்ணுக்குக் கீழ் பூசி, காய்ந்ததும் கழுவுங்கள்.

தொடரும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

**சம்பூர் சதீஸின்**

கடந்த வார தொடர்ச்சி .. ..

அங்கே தாமரை வில்லுக்கரையோரத்திலுள்ள மதுர மரத்தடியில் தண்ணீரில் கல்லெறிந்தவாறு தனித்தே காணப்பட்டாள்.

அருகிலிருந்த பூவரச மரத்தில் குதிரையை கட்டிவிட்டு குதிரையிடம் சத்தமிட வேண்டாம் என்று சொல்லித் தடவியவாறு தாமரையிருக்குமிடம் நோக்கி மொதுவாக காலடியெடுத்து வைத்தான்.

நேரமாகியும் வராத காதலனில் காதல் கோபங்கொண்ட தாமரை காத்திருந்து களைத்து கொம்புதேடும் கொடிபோல் வளைந்து கிடந்தாள். அந்த நிலைக்குக் காரணமான தன் காதலன் மேல் அளவற்ற பாசமாயிருந்தாள். தன்மீது கோபமாயிரு க்கின்றாள் என்று பின்னாலி ருந்த படியே



உணர்ந்த இளஞ்சிங்கன் மெதுவாக அவள் கண்களிரண்டையும் தன்னிரு கைகளினால் மூடிக் கொண்டான். திமிறியெழுந்த தாமரை அதற்கப்பால் அவனிடமிருந்து விடுபடமுடியா மலிருப்பதை உணர்ந்தாள். அந்நிலை தனக்கும் தேவையா யிருப்பதையும் அதே கணத்திலுணர்ந்த பின் வார்த்தைகள் மட்டும் வெளிப்பட்டு முணுமுணுத்தன.

அவற்றைக் கணக்கிலெடுக்காதவன் போல் கானகத்துக் காரிருளில் கைவிடப்பட்டவன் போல் மூக்கினால் வாசனையையும் கையினால் ஆதாரம் தேடி தடவுவதையும் போல் அவள் கூந்தலினுள் முகம்புதைத்து கூடிவரும் வாசனையில் தன்னையும் மறந்து வார்த்தைகள் அர்த்தமற்று எழுகையில் அவன் கைகளும் மேலும் கீழுமிறங்கி எதையோ தேடியலைந்தது.



வெட்கங் கொண்ட தாமரை என்னது? என்றாள் பொய்க்கோபத்துடன். முல்லைச் சரத்துடன் கார்மேகக் குழலில் கமழும் வாசணை என்னை நிலைதடுமாறச் செய்கிறது அன்பே என்றான். மீண்டும் ஆரம்பித்து விட்டீர்களா? உங்கள் பழைய பல்லவியை என்று கூறியவள் இதைக் தேடிக் கண்டுபிடித்து வரத்தானா இவ்வளவு நேரம் என்று செல்லமாய் கடிந்தாள். மன்னித்தருள வேண்டும் என் வருங்கால இராணியே உங்களிடம் பேச முக்கியமான தகவலுடன் வந்தேன் என்று நிதானம் காட்டினான்.

அவன் முகம் பார்க்க பின் திருப்பியவளின் கன்னங்கள் அவன் கன்னங்களில் உரச வார்த்தைகள் ஓடி ஒளிக்க சிறிது நேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். சட்டென்று தன்னிலை யுணர்ந்த தாமரை வெட்கத்துடன் அவன் மார்பில் சாய்ந்தாள். தன் கோபம் எங்கே போயிற்று என்று நாணமுற்று இதுதான் பெண்களின் நிலை என்று தன் தோழி சொன்னது நினைவிற்கு வந்தது. மீண்டும் இளஞ்சிங்கன் தாமரை உன்னோடு பேச வேண்டும் என்று சொன்னேன் என்றான்.

'அதுதான் பேசுகிறீர்களே' என்றாள் பதிலுக்கு. என்ன பேசுகிறேன் என்றவனுக்கு எங்கேயோ போக வேண்டும் என்று பேசுகிறீர்கள் என்றாள். அவளின் கன்னங்களை தனது இரு கைகளினால் பற்றியவன் ஆமாம் என்னுயிரே நான் உடனடியாக கண்டி இன்னுயிரே நான் உடனடியாக கண்டி இராசதானிக்குச் செல்ல வேண்டும் என்று அழைப்பு வந்த விடயத்தைக் கூறியதும் அவள் கண்களிரண்டிலிருந்தும் தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. விம்மி விம்மி சிறுகுழந்தைபோல அழுதவளுக்கு ஆறுதல் கூறி மார்போடு அணைத்து, தமிழரும் சிங்களவரும் சேர்ந்து கண்டியரசன் தலைமையில் பறங்கியரை வெளியேற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். இது விடயமாக கண்டியரசனுடனான சந்திப்புக்கு நான் செல்லப் போகின்றேன். நான் வரும் வரைக்கும் அவதானமாயிரு என்று குழைந்த குரலில் கூறினான். தன் தலைவன் தன்னைப் பிரிந்து வெகுதூரம் செல்வதை நினைத்து பொறுக்காதவளாய் சீக்கிரம் திரும்புங்கள் என்றாள். வாரியணைத்து அள்ளி தாங்கிய இளஞ்சிங்கன் காதருகினிலே காதல் வார்த்தைகள் சிலவற்றை இதமாக ஊற்றிவிட்டு, புரவியிலேறி தட்டியதும் புரவி பாய்ந்து சென்றது. இமைவெட்டாதவளாய் அவன் போவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தவள் தன்தோளில் கையொன்று பட்டதையுணர்ந்து சட்டென்று திரும்பினாள். அங்கே அவளுக்காக தனது தோழி நின்றுகொண்டிருந்தாள். தாமரைக்கு ஆறுதல் கூறியவாறு தோழி அவளை இருப்பிடம் அழைத்துச் சென்றாள்.



அன்றிரவு ஒற்றர் தலைவனையும், படைத்தலைவர் களையும் அழைத்து ஆலோசனை நடத்தினான் இளஞ்சிங்கன்.

... பாகம் 09
தொடரும் ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## கரம் சுற்றுப்போட்டி

திருகோணமலை பொதுச் சேவைகள் கழகம் Public Service Club கரம் விளையாட்டினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் எடுத்து வருகின்றது. இதன் ஓர் கட்டமாக திறந்த போட்டி அடிப்படையில் இருவர் கொண்ட அணிகளுக்கு இடையே சுற்றுப்போட்டி ஒன்றினை ஆவணி மாதம் நடத்தவுள்ளனர்.

ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பங்களை 02.08.2014க்கு முன்னதாக லவண்டர் வீதியில் அமைந்துள்ள கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள முடியும். போட்டிகள் 09.08.2014. 10.08.2014 ஆகிய தினங்களில் நடத்தப்படும்.

(கதிரவன்)

## கூடைப்பந்து வி.போட்டி

புனித இன்னாசியல் லெயோலா அவர்களின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பு யேசு சபையினரின் ஏற்பாட்டில் கூடைப்பந்து விளையாட்டுப் போட்டி கடந்த 20ம் திகதி புனித மிக்கேல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வானது அருட்தந்தை சகாயநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இப்போட்டியில் 13 வயதுக்குட்பட்ட மற்றும் 15 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். 15 வயதுக்குட்பட்ட பிரிவில் புனித மிக்கேல் கல்லூரி வெற்றி பெற்றது.







## களுதாவளை மகா வித்தியாலய வெற்றி


களுதாவளை மகா வித்தியாலயத்தில் இருந்து 2014ஆம் ஆண்டிற்கான மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் தெரிவாகி தேசிய மட்ட போட்டியில் உயர் தரப் பிரிவில் கவிதை ஆக்கத்தில் செல்வி துரைராசா வுகாரி முதலாம் இடத்தையும் ஆரம்பப் பிரிவில் எழுத்தாக்கத்தில் கனகசபை ஹீப்பிறதா மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.



இப் பாடசாலையானது 2014 ஆம் ஆண்டிற்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்து பட்டிருப்பு வலயத்தினை கிழக்கு மாகாணத்தில் முதலிடத்திற்கு வருவதற்கு உந்து சக்தியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## அத்தபத்து மாற்றம்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மாவன் அத்தப்பத்துவின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி அண்மைக் காலங்களில் முக்கியமான வெற்றிகளை பெற்றிருந்த போதிலும், புதிய தேசிய பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் இலங்கை அணியின் தற்போதைய களத்தடுப்பு பயிற்சியாளர் ருவன் கல்பகேயின் செயற்பாட்டில் முற்றாக அதிருப்தி அடைந்திருப்பதால் களத்தடுப்பு பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்களை கோருவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

# நிகழ்வுகள்

## பிரியாவிடை நிகழ்வு

- அச்சுதன் -

திருகோணமலை அன்புவழிபுரம் தி. கலைமகள் மகா வித்தியாலயத்தின் 2014 உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பிரியாவடை நிகழ்வும் உதயம் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளியீட்டு விழாவும் பாடசாலை விழா அரங்கில் 24.07.2014 வியாழக்கிழமை இடம் பெற்ற போது அந் நிகழ்விற்கு திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் விஜேந்திரன் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். இதன் போது உதயம் நூல் வெளியிடப்படுவதையும் வலயக்கல்விப் பணிப்பாளர் சிற்புரையாற்றுவதையும் இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள் : சேனையூர் நிருபர்





## ஒலிம்பியாட் சாதனை (கதிரவன்)



சர்வதேச ஒலிம்பியாட் கனிஷ்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள 10 மாணவர்களில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தரம் 7ல் கல்வி பயிலும் அருள்குமரன் ஆகாஷ் தெரிவாகி உள்ளார். இவர் தேசிய மட்டத்தில் 7ம் நிலையினைப் பெற்றுள்ளார். சர்வதேச ஒலிம்பியாட் சர்வதேச போட்டி எதிர்வரும் ஐப்பசி மாதம் (2014.10.04) நான்காம் திகதி இந்தோனேசி யாவில் நடைபெற உள்ளது.



படத்தில்: பயிற்றுவிப் பாளர் டேவிட்ராசா பகிதரனுடன் அதிபர் செ.பத்மசீலன்.

## சமய கருத்தரங்கு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (27.07.2014) காலை 9.30 மணியளவில் மணற்சேனை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையின் இந்து சமய கருத்தரங்கு மூதூர் பிரதேச இந்து குரமார் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு ஸ்ரீ சங்க முரகன் ஆலய பிரதம குரவி தலைமையில் இந்து சமய குருமார்களின் பங்களிப்புடன் நடைபெறவிருக்கின்றது.

அன்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான இந்து சமயம் தொடர்பான கருத்தரங்கு இடம்பெறும். அத்துடன் அவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட வுள்ளதுடன், ஆசிரியர்களுக்கான சமய கையேடுகளும், பாடவிதான புத்தகங்களும் கையளிக்கப்படவுள்ளது. இந்நிகழ்வு மணற்சேனை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

[illegible] குருக்கள்

# சர்வதேசச் செய்திகள்

### • பெண்ணுறுப்பை சிதைக்கும்படி தீவிர வாதிகள் எச்சரிக்கை

ஈராக்கின் மோசுல் நகரில் உள்ள சகல பெண்களிலும் பிறப்பு உறுப்புக்களை சிதைக்கும் சம்பிரதாயத்தை நிறைவேற்ற வேண்டுமென ஐசிஸ் கிளர்ச்சிக் குழு உத்தரவிட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

### • துப்பாக்கி முனையில் இளம்பெண் கற்பழிப்பு

கடந்த 20ம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் பிரான்க்ஸ் நகரில் உள்ள கல்லறைத் தோட்டத்தின் தெருவில் வந்த இளம்பெண்ணை மர்ம நபர் ஒருவர் துப்பாக்கி முனையில் அந்த பெண்ணை மிரட்டி கற்பழித்துவிட்டு சாதாரணமாக நடந்து சென்றுள்ளான்.

### • 18 வயதாகும்போது எப்படி இருப்பார்



பிரிட்டன் அரச குடும்பத்தின் குட்டி இளவரசர் என்று போற்றப்படும் ஜார்ஜ் அவர்களின் முதலாவது பிறந்தநாள் வெகுவிமரிசையாக நடந்துள்ள நிலையில் அவர் 18 வயதாக இருக்கும்போது எப்படி இருப்பார் என்பதை கற்பனை செய்தும், அவருடைய பெற்றோர்களின் புகைப்படங்களை ஆய்வு செய்தும், ஹங்கேரி நாட்டின் டிசைனர் Nikolett Meresz என்பவர் படம் ஒன்றை கம்ப்யூட்டரில் வரைந்துள்ளார்.

### • மலேசிய விமானத்தை தவறுதலாக சுட்டு வீழ்த்திவிட்டோம்.

உக்ரைன் நாட்டின் சரக்கு விமானம் என்று தவறுதலாக மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்திவிட்டதாக ர்'ய ஆதரவு தீவிரவாதிகளில் ஒருவர் இத்தாலி பத்திரிகை ஒன்றுக்கு பகிரங்க பேட்டியளித்துள்ளார்.

### • இஸ்ரேலுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றம்

காஸா மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல் பற்றி விசாரணை நடத்தக்கோரி ஐநா மனித உரிமைகள் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானத்திற்கு பிரிக்ஸ் நாடுகள் ஆதரவளித்துள்ளன.

### • மீட்கப்பட்ட இத்தாலி சொகுசு கப்பல் உடைப்பு



கடந்த 2012–ம் ஆண்டு இத்தாலி அருகே நான்காயிரம் பயணிகளுடன் சென்ற கோஸ்டா கண்கார்டியா என்ற சொகுசு கப்பல் கடலில் மூழ்கியது. இதில் 32 பேர் உயிரிழந்தனர். மற்றவர்கள் மீட்கப்பட்டனர். அந்த கப்பலை மீட்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது. கப்பலை இனி பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் அந்த கப்பலை உடைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### • குறுகிய நேரத்தில் சீனா செல்ல நேபாளத்தில் புதிய பாலம்



நில வழியாக மிக குறுகிய தூரத்தில் சீனாவுடன் இந்தியாவை இணைக்கும் புதிய பாலம் ஒன்று நேபாள நாட்டில் பொதுமக்களின் பயணத்திற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. 100 மீட்டர் நீளமுள்ள இந்த கர்கோட் பாலம் 1.8 பில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது.

### • அல்ஜீரியா விமானம் விழுந்து நொருங்கியது



அல்ஜீரியாவில் இருந்து புறப்பட்ட ஏர் அல்ஜீரியாவின் ஏஎச்-5017 என்ற விமானம் நைஜரில் விழுந்து நொறுங்கியதில் விமானி உள்பட 116 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

### • மத்திய கிழக்கில் தேவாலயங்களிலும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

காஸாப் பகுதியிலுள்ள கிறிஸ்தவப் பிரதான குருவான அலெக்ஸியஸ், போரினாற் பாதிக்கப் பட்டவர்களுக்காகத் தேவாலயத்தைத் திறந்து வைத்திருப்பதாகவும், அங்கு தஞ்சம் புகுந்தவர்களையும் வெடித்துச் சிதறிய குண்டுகளின் துண்டுகள் பல தாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### • MH17 இல் பலியான நபரின் கிரெடிட் கார்டை பயன்படுத்திய தீவிரவாதிகள்.

MH17 விமானத்தில் பலியான தென்னாப்பிரிக்க நாட்டை சேர்ந்த ஒருவர் பலியானார். ஆனால் அவருடைய கிரெடிட் கார்ட் தற்போது ரஷ்ய ஆதரவு தீவிரவாதிகளால் உக்ரைன் நாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைத் திருப்திப்படுத்தவா சீனன்குடாவில் விமான பராமரிப்பகம்




சீனன்குடாவில் நிர்மாணிக்கபபடவுள்ள விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிலையமானது இந்தியாவைத் திருப்திப்படுத்தும் ஓர் முயற்சியெனத் தெரிய வருகின்றது.

வருடாந்தம் பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்து இலங்கை வான்படைக்குச் சொந்தமான வானோடங்கள் பாகிஸ்தானிலேயே திருத்தங்கள் மற்றும் பராமரிப்பிற்காக அனுப்பப்படுவது வழமையானது.

எனினும் தற்போது பாகிஸ்தானிய உறவை இந்திய உறவுக்காகத் தியாகம் செய்யச் சித்தமாயுள்ள இலங்கை அதன் பல்வேறு படிநிலைகளில் ஒன்றாக சீன உதவியுடன் கூடிய பராமரிப்பகமொன்றை சீனன்குடா வான்படைத் தளத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இவ்வடம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவப்பேச்சாளர் .........

13

## மனைவியை மீட்டுத் தாருங்கள்- கணவர் கோரிக்கை



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து சட்டத்திற்கு முரணான வகையில் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்ட தனது மனைவியை வரவழைத்துத் தருமாறு கணவன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை கோரியுள்ளார்.

முன்னம் போடிவெட்டை கிராமத்தைச் சேர்ந்த கருணாகுலசிங்கம் தனது மனைவி சித்ரா சட்டத்திற்கு முரணாக வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருப்பதாக தெரிவித்து பிரதேசச் செயலாளருக்கும் ஏனைண அரச அதிகாரிகளுக்கும்


## திருமலை-ஹபரணை வீதியில் தீ

ஹபரண - திருகோணமலை வீதியின் 121 ஆம் மைல் பகுதியில் காட்டுப்பகுதியில் தீ பற்றியதை அடுத்து குறிப்பிட்டளவு காட்டுப் பிரதேசம் நாசமாகியுள்ளது.

நேற்று நடைபெற்ற இவ்வசம்பாவிதத்தினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய காவல்துறையினர் அதற்காக இராணுவத்தினரின் உதவியை நாடியிருந்தனர்.

கடும் முயற்சியின் பின்னர் தீ கட்டுப்படுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மேன்கமத்தில் தொடரும் அத்துமீறிய குடியேற்றம்




(ஸ்ரீ)

மேன்கமம் குளத்துவெளி காணிகளில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேன்கமம் அபிராமி விவசாயச் சம்மேளத்திற்குச் சொந்தமான இக்காணிகள் மேன்கமம் கிராம சேவையாளரின் கண்காணிப்பின் கீழ் வருவதுடன் மூதூர் பிரதேசச் செயலாளரின் நிர்வாகத்திற்குட்படும் பிரதேசமாகவும் உள்ளது.

எனினும் இக்காணிகள் ஏற்கனவே சுத்தமாக்கப்பட்ட போது அதற்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் தற்போது தலைக்கு 20 பேர்ச் என்ற........

13

## "காவல்துறை நடவடிக்கையைத் தடுத்தார்கள்" நாடாளுமன்ற உறுப்பினருக்குப் பிணை

(கதிரவன்)

காவல்துறையின் சுதந்திரமான நடவடிக்கைகளைத் தடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட பதின்நான்கு பேருக்கு கடந்த 23ம் திகதி மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு எருமை மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்காக சட்டவிரோதமாகக் கடத்தி வ்நத சிலரை கிண்ணியாக் குறிஞ்சாக் கேணிப் பிரதேசத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்..

அதனையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற தற்பொதைய திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், முனனாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.மஹ்ரூப், கிண்ணியா நகரசபைத் தலைவர் ஹில்மி, .... .. .. .. .. ..

13

## புதிய கூட்டணி???

(படம் - தமிழ்மிரர்)






## தொண்டர் நிறுவனங்கள் நிதியினைப் பெறமுன் அனுமதி பெற வேண்டும்

(ஸ்ரீ)

தொண்டர் நிறுவனங்கள் வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மட்டுப்பாடுகளை அறிவித்த தொண்டர் நிறுவன ஒழுங்குபடுத்தும் செயலகத்தில் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இலங்கையின் நிதி அமைச்சு தொண்டர் நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் நிதி தொடர்பான மட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இம் மட்டுப்பாட்டின் படி இனிவரும் காலங்களில் வெளிநாட்டு நிதியுதவியைப்.....

13

## மாணவர்களின் தற்கொலை கவலை தருகின்றது



### அரியம் நா.உ

வடக்குக் கிழக்கில் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் வீதம் அதிகமாகக் காணப் படுகின்றமை கவலையளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இத் தற்கொலைகளுக்கு அதிகம் காரணமாக இருப்பது காதல் விடயங்களே எனத் தெரிவித்துள்ள அவர் காதல் விவகாரத்தில் மாணவர்க் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org